# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு2029புரட்டாதி13செவ்வாய்க்கிழமை(29-09-1998)UTHAYAN A Lively National Tamil Daily சுடர்:261


# கிளிநொச்சியில் உக்கிர சண்டை!

## இரு நாள் மோதலில் பெரும் உயிர்ச்சேதம்

கொழும்பு, செப்டெம்பர் 29

கிளிநொச்சியில் நேற்றும் நேற்று முன்தினமும் ஸ்ரீலங்கா அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடுஞ்சமர் நிகழ்ந்துள்ளது.

இரு தரப்பிலும் பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

நேற்று முன்தினம் அதிகாலை 1.30 மணிக்கு பரந்தன், கிளிநொச்சிப் பிரதேசத்தில் இத்திடீர்த் தாக்குதலை விடுதலைப் புலிகள் ஆரம்பித்துள்ளனர்.

பரந்தன், ஆனையிறவு இராணுவத் தளங்கள் மீதும் ஆட்லறித் தாக்குதல்கள்

(10 ஆம்பக்கம் பார்க்க)

## கிளைமோர் மீட்பு

மட்டக்களப்பு, செப் 29

மட்டக்களப்பு கிண்ணையடி இராணுவமுகாமிலிருந்து ஐந்நூறு மீற்றர் தூரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அதிசக்தி வாய்ந்த— சுமார் ஐந்து கிலோ எடையுள்ள — கிளைமோர் குண்டு ஒன்று நேற்றுக்காலை வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்ட படையினரால் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கொழும்பில் விடாது அம்புலன்ஸ்கள் ஓட்டம்

கொழும்பு, செப். 29

கொழும்பு காலி வீதியில் நேற்று முழுநாளும் அம்புலன்ஸ் வண்டிகள் ஓயாமல் ஓடித்திரிந்ததை அவதானிக்க முடிந்தது.

கிளிநொச்சிப் பகுதியில் நடந்தசமரில் காயமடைந்த பெரும் எண்ணிக்கையான படையினர் விமானம் மூலம் இரத்மலானை விமான நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டனர். அவர்களை அங்கிருந்து அவசரஅவசரமாகக் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கும் இராணுவ ஆஸ்பத்திரிக்கும் ஏனைய மருத்துவமனைகளுக்கும் ஏற்றிச் செல்வதில் அம்புலன்ஸ்வண்டிகள் ஓயாமல் சேவையில் ஈடுபட்டிருந்ததாகக் கொழும்புச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை சந்தை விவகாரம்

## பிரிகேடியர் கூட்டிய மாநாடு ரத்தானது

மட்டக்களப்பு, செப். 29

திருகோணமலை நகர சபையின் சந்தைக் கட்டடத்தைத் திறப்பது தொடர்பாக இணைப்பதிகாரி பிரிகேடியர் லோறன்ஸ் பெர்னாண்டோ நேற்று கூட்டிய உயர்மட்ட மாநாடு இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது.

நகர சபைத் தலைவர் பெ. சூரியமூர்த்தி, மாகாண பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி உட்பட உள்ளூராட்சி சபை அதிகாரிகள் இம் மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

நகரசபைத் தலைவர் பெ. சூரியமூர்த்தி இம் மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என அறிவித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் உட்பட மூவர் மூதூரில் நேற்றுப் பலி!

கொழும்பு, செப். 29

திருகோணமலை மாவட்டம் மூதூர் வைத்தியசாலை அருகில் நேற்று நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகச் சம்பவமொன்றில் இராணுவ புலனாய்வு வீரரொருவர் உட்பட 3 பேர் பலியானார்கள்.

விடுதலைப் புலிகள் நடமாட்டம் குறித்து கிடைத்த தகவலையடுத்து விரைந்தவர்கள் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று கூறப்படுகின்றது.

முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரும், தற்போது இராணுவத்துடன் இணைந்து செயற்படுபவரும் என்று கருதப்படும் எஸ்.சிவா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில் பலியான 57 பேரின் பெயர் விவரம்

வவுனியா, செப். 29

கிளிநொச்சிப் பகுதியில் இரண்டு தினங்களாகத் தொடர்ந்து இடம்பெற்ற சமரில் தமது தரப்பில் களப் பலியானோரின் 57 பேரின் விவரங்களை விடுதலைப்புலிகள் வெளியிட்டுள்ளனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★ கபில்ஜன் (சிவபாலன் சிவகுமார் — திருமலை).
★ மன்மதன் (தங்கவேல் நகுலேஸ்வரன் — யாழ்ப்பாணம்).
★ ஒத்திசையன் (வைரமுத்து சிவஞானம்— மட்டக்களப்பு).
★ திவ்வியவர்மன் (சாமித்தம்பி காண்டீபன் — மட்டக்களப்பு).
★ யாழ்தேவன் (ஆறுமுகம் உதயன்— அம்பாறை).
★ தூயோன் (குழந்தைவேல் சிறிகுமார் — மட்டக்களப்பு).
★ காந்தரூபி (சந்தோசம் தயாராணி— மட்டக்களப்பு)
★ வானதி (இராசதுரை நித்தியா— யாழ்ப்பாணம்).
★ சுபா (தம்பிப்பிள்ளை உதயா — மட்டக்களப்பு).
★ கலையரசி (செல்லப்பிள்ளை சூரியகலா — திருமலை).
★ தென்றல் (நாகமணி வாசுகி — மட்டக்களப்பு)
★ இன்பவேள்ஐயாத்துரை சசிகலா — மட்டக்களப்பு)
★ சுகி (முருகுப்பிள்ளை ரஞ்சினி — மட்டக்களப்பு)
★ உதயா (அழகுராஜ் வசந்தகுமாரி — மட்டக்களப்பு)
★ சுகந்தா அல்லது கங்கா (சினித்தம்பி குட்டி —மட்டக்களப்பு)
★ கோமகள் (புனிதநாதன் ராஜேஸ்வரி — மட்டக்களப்பு)
★ சபேசன் (நடராசா வசந்தராசா — மட்டக்களப்பு)
★ அகல்விழியன் (சிவநாதபிள்ளை குமார் — அம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 14 ஆண்டுக்கு முன் நாவாந்துறைக் கடலில்

## தம்மைக் காப்பாற்றிய 3 மீனவரை தேடுகிறார் யாழ்.நகர் புதிய தளபதி

யாழ்ப்பாணம், செப். 29

பதினான்கு வருடங்களுக்கு முன்னர் நாவாந்துறைக் கடலில் தனது உயிரைக் காப்பாற்றிய மூன்று மீனவர்களையும் சந்திப்பதற்குத் தேடுகின்றார் யாழ். நகரின் புதிய இராணுவத் தளபதி கேணல் டி.ஆர்.ஏ.பி. ஜெயதிலக.

உயிரிழந்த மேஜர் ஜெனரல் சுஸந்த மெண்டிஸின் இடத்துக்கு — 512 ஆவது பிரிக்கேட்டின் — கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள கேணல் ஜெயதிலக தமது பதவியை ஏற்றுக் கொண்ட பின்னர் 'உதயன்' பிரதிநிதியைச் சந்தித்த போது தமது விருப்பத்தை வெளியிட்டார்.

1984 ஆம் ஆண்டு நாவாந்துறைக் கடலில் ஸ்ரீலங்கா விமானப்படை ஹெலி ஒன்று விழுந்து சிதறியபோது உயிருக்குத் தத்தளித்த மூன்று படை வீரர்களுள் அவரும் ஒருவராவார். அப்போது தம்மைக் காப்பாற்றிய நாவாந்துறை மீனவர்கள் மூவரையே தாம் சந்திக்க ஆவலாக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் விசாரிக்கப்படும்

## மாநகரசபை ஊழியருக்கு 3 மாத தடுப்புக்காவல்

யாழ்ப்பாணம், செப். 29

யாழ். மாநகர சபைக் குண்டு வெடிப்புத் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள மாநகரசபை பொதுசனத் தொடர்பு அதிகாரி மற்றும் மாநகரசபை ஊழியர்கள் மூவரையும் மூன்று மாதங்களுக்குத்தடுப்புக்காவலில்வைத்திருப்பதற்கான தடுப்புக்காவல்உத்தரவுப்பத்திரங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மற்றொருவர் கைது

கொழும்பு, செப். 29

சிலாபம் ஆராய்ச்சிக் கட்டுவ பிரதேச சபைத் தலைவர் கிங்ஸ்லி சரத் ஹேமச்சந்திராவின் படுகொலை தொடர்பாக தேடப்பட்டு வந்த மேலும் ஒரு முக்கிய நபரை நேற்றுக் காலை பொலீஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## கண்ணி அகற்றும் பணிக்கு

## வானொலிக் கருவிகளை எடுத்துவர அனுமதி

கொழும்பு. செப். 29

குடாநாட்டில் ஆள்களுக்கு எதிரான நிலக் கண்ணிகளை அகற்றும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பணியில் ஈடுபடவுள்ள ஐ. நா. நிபுணர்கள் பயன்படுத்துவதற்கான வானொலித் தொடர்புசாதனங்களை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்ல அனுமதி வழங்கி இருப்பதாகக் கொழும்பில் உள்ள ஐ. நா. வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார்.

அரசு அனுமதித்துள்ள தொடர்புச் சாதனங்கள் தமது பணிக்குப் பயன்படுத்தப் பொருத்தமானவையா என்பது அடுத்த சில தினங்களுக்குள் பரிசீலிக்கப்பட்டுவிடும் என்றும் —

அவை தமது பணிக்குப் பொருத்தமாக இருக்கும் பட்சத்தில் கண்ணிவெடிகளை மீட்கும் நிபுணர்கள் உடனடியாக யாழ்ப்பாணம் அழைத்துச்செல்லப்படுவர் என்றும்—

ஐ. நா. வதிவிடப்பிரதிநிதி தெரிவித்தார்.

குடாநாட்டில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட வந்த நிபுணர்கள் வானொலித் தொடர்புக் கருவிகளைப் பயன்படுத்த அனுமதி மறுக்கப்பட்டதால் அப்பணி தடைப்பட்டிருப்பது தெரிந்ததே. (ஐ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அங்கயற்கரசி ஸ்ரீபுஸ்பநாதன்

(இளைப்பாறிய ஆசிரியை, மல்லாகம் கனிஷ்ட மகாவித்தியாலயம்)

'அப்பா வளவு' குளமங்கால் மல்லாகத்தைச் சேர்ந்தவரும் தற்காலிகமாக ஆலங்குளம் துணுக்காயில் வசித்தவருமாகிய திருமதி அங்கயற்கரசி ஸ்ரீபுஸ்பநாதன் 24-9-98 வியாழனன்று துணுக்காயில் காலமாகிவிட்டார்.

அன்னார் திரு. நா. ஸ்ரீபுஸ்பநாதனின் (இளைப்பாறிய அதிபர், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி) அன்பு மனைவியும், நளினியின் வளர்ப்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் — தங்கச்சியம்மாவின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான நாகநாதர் — புஸ்பகாந்தியம்மா தம்பதிகளின் சிரேஷ்ட மருமகளும், வேலும்மயிலும், அன்னலட்சுமி, சிவசோதி, சுந்தரமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலசுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான தர்மாவதி, புனிதவதி மற்றும் பத்மினிதேவி, விஜயநாதன், சிவநாதன், கௌசல்யாதேவி, சத்தியநாதன், சத்தியதேவி மற்றும் கமலேந்திரன், சாம்பசிவமூர்த்தி, சத்தியசிவசொரூபிணி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் 26-9-98 அன்று துணுக்காயில் நடைபெற்றதென்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:-
வேலும்மயிலும் சேந்தன்

'சிவபதி',
வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில். (59499)

## திருமதி ஆறுமுகம் கதிராசிப்பிள்ளை

குப்பிளானைச் சேர்ந்த திருமதி ஆறுமுகம் கதிராசிப்பிள்ளை காலமானார்.

இவர் காலஞ்சென்ற அப்பாசியர் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆசிரியர் தருமலிங்கம், உடுவில் பிரதேச செயலாளர் மகாலிங்கம், தவமணிதேவி (முன்னாள் ஆசிரியை, யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), காலஞ்சென்ற மல்லிகாதேவி, உருத்திரலிங்கம் (கனடா), ஸ்ரீஸ்கந்தவேல் (சுவிஸ்), புத்திரசிகாமணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலாதேவி, சிவகாமசுந்தரி, காலஞ்சென்ற நவரத்தினம், சிவகுமாரி (அதிபர், புன்னாலைக்கட்டுவன் அ. த. க. பா.), தவமணி, குணலோஜினி, இந்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும், அமிர்தலிங்கம், தருமரஞ்சினி, சியாமளா, சிவானந்தன், சங்கீதா, மதுரா, செந்தூரன், சஞ்சீவன், கபிலன், நிஷாந்தன், நஷாந்தினி, கீர்த்திகா, அர்ச்சனா, சுகன்யா, சரண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-9-98) செவ்வாய்க்கிழமை பி. ப. 2.00 மணிக்குக் குப்பிளான் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. மகாலிங்கம்
(மகன்)

குப்பிளான், ஏழாலை. (59507)

## செல்லையா நல்லதம்பி

(ஊழியன் அச்சக உரிமையாளர்)

வல்வெட்டித்துறையைப்பிறப்பிடமாகக்கொண்ட செல்லையா நல்லதம்பி 27-09-98 ஞாயிற்றுக்கிழமை அன்று வவுனியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் அல்லியம்மாவின் அன்புக் கணவரும், சுரேந்திரன் (கனடா), பவானி (வைரமாளிகை), தனலக்ஷ்மி (லண்டன்), ரவீந்திரன் (இந்தியா), பாலேந்திரன் (ஜேடா), ஸ்ரீகுமாரி (டென்மார்க்), விஜயகுமாரி (கனடா), லலிதகுமாரி (வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் மற்றும் சியாமளா (கனடா), முருகமூர்த்தி (வைரமாளிகை உரிமையாளர்), குமாரசிறீதரன் (லண்டன்), செல்லக்கிளி (இந்தியா), ரூபலக்ஷ்மி (இந்தியா), சந்திரகுமார் (டென்மார்க்), செல்வச்சந்திரன் (கனடா), பிருந்தாபஈஸ்வரன் (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் வாணி, ஜெயந்தினி, செந்தூரன், கனவேலழகன், குறிஞ்சிக்குமரன், முகுந்தன, வசந்தன், பிரபு, பிரதீபன், பிரசன்னா, பிரசாந்த், பிரகாஷ், சுதாகரன, துவாரகா, சாதனா, புஷ்பா, காருணி, நீரஜா, மாதுரி, சோபனா, மருஹன் ஆகியோரின் அன்புப் பேரனும் சாவித்திரிதேவி, கமலாதேவி, சுப்பிரமணியம், ஞானமூர்த்தி ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பவானி முருகமூர்த்தி
(வைரமாளிகை)
(மகள்)

79, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம். (59483)


## நியூ சயன்ஸ் அக்கடமி

நல்லூர்.

கணக்கீடு
திரு. பாலவாசன்

99 A/L

கிரயக் கணக்கீடு

ஆரம்பம்:- 01 - 10 - 98
வியாழன் - 6-30 a.m.
செவ்வாய், வியாழன்
6-30 — 7-30 a.m.
(59501)



## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
தேசியவிருது பெற்ற
சிவாஜி - ராதா
சத்தியராஜ் நடித்த
முதல்மரியாதை
( ரீல்ஸ் )
காட்சி: 10-30, 2-30
(59506)



## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
இன்று மட்டும்
சத்தியராஜ்
( இரு வேடங்களில் )
கஸ்தூரி, சுஜாதா
நடித்த
அமைதிப்படை
நாளை முதல்
ரோஜா
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4999)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

### பொது பட்டமளிப்பு விழா 1998

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 1998 - 10 - 04 ஆம் திகதி மூன்று அமர்வுகளில் நடைபெறும்.

இப் பட்டமளிப்பு விழாவில் நேரடியாகப் பட்டம் பெறுவோருக்கு 1998-10-1 ஆம் திகதி தொடக்கம் 1998 - 10 - 03 ஆம் திகதி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக் கிளையில் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும்.

பட்டமளிப்பு விழாவில் புகைப்படம் எடுப்பதற்கான கட்டணமாக ரூபா 30/- ஐ பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்திய பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்துப் பட்டமளிப்புவிழா அங்கிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
கல்விக்கிளை.
28 - 09 - 1998
(சி/5013)

## ரூபவாஹினியில் நல்லூர் உற்சவம்

யாழ்ப்பாணம், செப். 29

கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற நல்லூர்க் கந்த சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர், தீர்த்தம் மற்றும் பூங்காவனத் திருவிழாக்களின் தொகுப்பு நிகழ்ச்சி இன்று செவ்வாய் இரவு 7 மணிக்கு ரூபவாஹினியில் ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளது.

இலங்கை ரூபவாஹினி ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த இரா. இரவீந்திரன் இந்த நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்குகின்றார்.

# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் சோமசுந்தரம் (வேதவனம்)

இணுவில் மேற்கைச் சேர்ந்த மயில்வாகனம் சோமசுந்தரம் 27-09-98 அன்று காலமானார்.

இவர் இராசமணியின் அருமைக் கணவரும், மயில்வாகனம் பத்தினிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், கதிர்காமசேகரம்பிள்ளை, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும், அமரர் நல்லதங்கம், அமரர் பரமலிங்கம், அமரர் வேலுப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், தபோதநாயகம் (ஆசிரியர், பரஞ்சோதி வித்தியாலயம், கோண்டாவில்), திருமதி மங்கையர்க்கரசி, பேரின்பநாயகம் (கனடா), சிவநாயகம் (கனடா), பங்கயற்செல்வி (நாவலப்பிட்டி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி சிவயோகி (ஆசிரியை, கொக்குவில் இராமகிருஷ்ணா மகளிர் வித்தியாலயம்), சி. அழகேசன், திருமதி தயாட்சணி (கனடா), திருமதி வாசுகி (கனடா), ச. விக்கினேஸ்வரன் (நாவலப்பிட்டி) ஆகியோரின் மாமனாரும், த. தர்சிகா (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி), த. மதீசன் (யாழ். இந்துக் கல்லூரி), அ. அமிர்தலோஜனன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), அ. துவாதிகா, அ. அமிர்தசிந்துஜன் (இணுவில் மத்திய கல்லூரி), அ. மதுபாஜினி, பே. ஆதிவராகன், பே. அமிர்தசாகரன், பே. ஆனந்தகானன் (கனடா), சி. ஷர்மிகா (கனடா), சி. ஆரணி (கனடா), வி. அமிர்தவர்ஜனன் (நாவலப்பிட்டி) ஆகியோரின் பேரனும், திருமதி சோ. வள்ளிப்பிள்ளை, க. துரைராஜசிங்கம், க. பூபாலசிங்கம், திருமதி சு. சிவயோகம், திருமதி கு. இராசமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28-09-98 அன்று காரைக்கால் மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வட்டுவினி, மனைவி: சோ. இராசமணி
இணுவில் மேற்கு, மகன்: தபோதநாயகம்
இணுவில். (59500)

## றோக் பிரான்ஸிஸ் யோசப்

(போமன், ஆசீர்வாதம் அச்சகம்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல; 123, பற்றிக்ஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட றோக் பிரான்ஸிஸ்யோசப் 28-09-98 இல் காலமாகிவிட்டார்.

இவர் ஆசீர்வாதம்மாவின் அன்புக் கணவரும் மேரிஜோசப்பின் ஜான்சிராணி (ஆசிரியை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), அன்ரன்டேவிட் ஜெகதீஸன் (ஜெகா, பிரான்ஸ்), மேரி டானியல் ஜீவகன் (ஜீவா, லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ம. மரியதாஸ் (ஆசிரியர், யா/மத்திய கல்லூரி), செல்வராணி (லண்டன்), பாமினி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சாமிநாதர், கிறிஸ் ரோஸ்ரம் மற்றும் சௌந்தரி, றோசம்மா ஆகியோரின் மைத்துனரும் மனோஜ்குமார், ஜஸ்ரினி, ஜஸ்மினி, மயூரிக்கா, அதிரியன், ஜெயந்குமார் ஆகியோரின் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29-09-1998) செவ்வாய்க்கிழமை பிறபகல் 3-30 மணிக்கு பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ம. மரியதாஸ்
(மருமகன்)

123, பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம். (59504)

## இராசையா இராமு

கிளாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இ. இராமு அவர்கள் 27-9-98 ஞாயிறு இரவு இயற்கை எய்திவிட்டார்.

இவர் இராசையா—செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் இராசலட்சுமியின் அன்புக்கணவரும், மயூறதன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி) மனோகரன் (வேம்பொடுகேணி சி. த. க. பா), சுலோஜன் (கிளாலி றோ. க) ஆகியோரின் அன்புத்தந்தையும், ஆறுமுகம், கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சின்னம்மா, சரஸ்வதி, பாய்க்கியம், சிவகுரு, செல்லையா, முத்து, இலட்சுமி, முத்துப்பிள்ளை, கணேஸ் ஆகியோரின் சகோதரரும், செல்லம்மா, முருகேசு, செல்வராசா, நடராசா, சொக்கலிங்கம், வேல்முருகு, சிவராசா, தங்கவேலு (ஆசிரியர் வேம்பொடுகேணி, சி. கி. த. க. பா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29-9-98 இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 2-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. தங்கவேலு
(மைத்துனர்)

கிளாலி,
எழுதுமட்டுவாள். (59498)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மன் பொதுத்தேர்தலில் ஹெல்மட்கோல் தோல்வி

## புதிய அதிபர் ஜெர்ஹாட் ஷ்ரூடர

பொன். செப். 29

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஜேர்மன் தேர்தலில் 16 வருடகாலம் ஜேர்மன் அதிபராக இருந்த ஹெல்மட் கோல் தோல்வி கண்டார்.

இவரது கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி சமீபத்தில் நடத்தப்பட்ட பொதுசன அபிப்பிராய வாக்குக் கணிப்புகளில் சமூக ஜனநாயகக் கட்சியுடன் போட்டா போட்டி நிலையில் இருந்த போதிலும் ஞாயிறன்று நடைபெற்ற வாக்களிப்பில் தோல்வி கண்டுள்ளது.

தேர்தலில் 41 சதவீத வாக்குகளைப் பெற்ற சமூக ஜனநாயக் கட்சித் தலைவர் ஜெர்ஹாட் ஷ்ரூடன் ஜேர்மனியின் புதிய அதிபராக (சான்ஸிலர்) பதவி ஏற்க உள்ளார்.

ஜேர்மனியில் ஹெல்மட் கோலின் ஆட்சியின்போது பல லட்சம் மக்கள் வேலை வாய்ப்பின்றி இருந்ததுடன் பொருளாதார நிலையும் மந்த கதியில் செல்லத் தொடங்கியது.

இதனால் மக்கள் அதிருப்தி அடைந்திருந்ததே அவர் தேர்தலில் தோல்வி அடையக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிறிஸ்தவ ஜனநாயக் கட்சியில் 25 வருடகால தலைமைப் பதவியை வகித்த ஹெல்மட் கோல் தனது பதவியை துறந்துள்ளதுடன் தான் தேர்தலில் தோல்வியுற்றதையும் ஒப்புக் கொண்டுள்ளார்.

கடந்த ஆறு மாதங்களாக ஜேர்மனியில் வெகுஜன சாதனங்கள் நடத்திய கருத்துக் கணிப்புகளில் ஷ்ரூடரே முன்னணியில் நின்றார்.

ஆனால் தேர்தல் நடைபெறுவதற்கு முன் கடைசியாக நடத்தப்பட்ட வாக்குக் கணிப்பின் போது ஷ்ரூடருக்கும் ஹெல்மட் கோலுக்கும் இடையில் கடுமையான போட்டி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தேர்தலுக்கு முன் கடைசியாக முனிச் நகரில் நடத்தப்பட்ட பிரசாரக் கூட்டத்தில் ஹெல்மட் ஹோல் பேசுகையில் பொதுஜன அபிப்ராய வாக்குக் கணிப்பு பொய்யானது என்பதை தாம் மீண்டும் ஒரு தடவை நிரூபிக்கப் போவதாகத் தெரிவித்திருந்தார்.

இதற்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்களிலும் ஹெல்மட் ஹோல் தோற்பார் என்றே பொதுஜன கணிப்புகள் தெரிவித்திருந்தன. எனினும் அவர் வெற்றி பெற்றிருந்தார்.

(இ-ரி)

---

# பலகோடி பணம் வெளிநாட்டு வங்கிகளில்

## ஷெரீப் மீது குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத், செப். 29

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கோடிக் கணக்கான பணத்தை வெளிநாட்டு வங்கிக் கணக்குகளில் போட்டுவைத்திருப்பதாகவும்— லண்டனிலும் முதலீடு செய்திருப்பதாகவும்— பாகிஸ்தானின் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

ஷெரீப்பின் குடும்பங்களின் கட்டுப்பாட்டில் உள்ள கம்பனிகளிலும், வங்கிக் கணக்குகளிலும் 7 கோடி பவுண்ட் போடப்பட்டிருப்பதை ஐந்தாண்டு காலமாக புலனாய்வு செய்து கண்டு பிடித்திருப்பதாக பாகிஸ்தான் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

இதேவேளை அரசியல் செல்வாக்கு மூலம் ஷெரீப் பணம் சேர்த்துக் கொண்டார் என்ற நூற்றுக்கு மேலான பக்க ஆவணங்களை வெளியிடப்போவதாக எதிர்க் கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சி அறிவித்துள்ளது.

புலனாய்வுத்துறையின் அறிக்கைகளினால்பாகிஸ்தான் அரசியல் நிலைமை தளம்பல் அடையலாம். அதேவேளை எதிர்க்கட்சிகள் இந்த அறிக்கையைப் பயன் படுத்தி ஷெரீப்பை பதவியில் இருந்து அகற்ற முனையலாம் என அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

(இ-ரி)

---

# ஸ்லோவாக்கியாவில் ஆளும்கட்சி தோல்வி

ஸ்லோவாக்கியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத் தேர்தல்களின் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

பிரதமர் விளடிமர் மஷீயரின் அரசு படுதோல்வி அடையலாம் என தற்போது தெரிவிக்கப்படுகின்றது.

மஷீயரின் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் இருந்த 150 ஆசனங்களில் 48 ஆசனங்களே கிடைக்கும் என செய்திகள் தெரிவிக்கின்றன.

நான்கு எதிர்க்கட்சிகள் சுமார் 48 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளன.

அத்துடன் மஷீயரின் அரசியல் ஆட்சியைக் கவிழ்த்து, நாட்டில் புதிய அரசமைப்பை உருவாக்கி புதிய பிரதமர் ஒருவரை நியமிக்க போதுமான வாக்குகளை எதிர்க் கட்சி பெறும் எனவும் தெரிய வருகிறது.

ஸ்லோவாக்கியா 1992 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. அது முதல் பிரதமர் பதவியில் ஆறு ஆண்டு காலமாக விளடிமர் மஷீயர் இருந்து வந்தார்.

(இ-ரி)

---

# ஈரான் எல்லைக்கு மேலும் 4 ஆயிரம் படையினரை தலிபான் நகர்த்தியது

தொஹ்ரான், செப். 29

ஈரானிய எல்லைப் பகுதியில் தனது பாதுகாப்பை பலப்படுத்த தலிபான் மேலும் 4 ஆயிரம் துருப்புக்களை அனுப்பி வைத்துள்ளது.

எல்லை அருகே ஏற்கனவே 30 ஆயிரம் தலிபான் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

அதே சமயம் ஆப்கானிஸ்தானை அண்டிய தனது எல்லைப் பகுதியில் ஒரு வார காலத்தினுள் மீண்டும் இராணுவப் பயிற்சியை நடத்தப் போவதாக ஈரான் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே 2 இலட்சம் ஈரானியத் துருப்புக்கள் டாங்கிகள், பீரங்கிகள் மற்றும் ஏனைய ஆயுதங்களுடன் எல்லையருகே நிறுத்தியிருக்கும் ஈரான் மேலும் 70 ஆயிரம் புரட்சிக் காவலர்களையும் அப் பணியில் ஈடுபடுத்தியுள்ளது என செய்திகள் தெரிவிக்கின்றன.

[இ-ரி]

---

# ஆஸி. ஒலிம்பிக் போட்டி யார் ஆரம்பித்து வைப்பது?

சிட்னி, செப். 29

ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னி நகரில் 2000 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஒலிப்பிக் விழாவை ஆரம்பித்து வைப்பது யார் என்பது குறித்த சர்ச்சை இப்போதே எழுந்துள்ளது.

ஒலிம்பிக் சம்பிரதாயப்படி ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் நாட்டின் தலைவரே விழாவை ஆரம்பித்து வைப்பது வழக்கம். அதே நேரம் ஆஸ்திரேலியாவின் அரசமைப்புப்படி அந்நாட்டின் தலைவி பிரிட்டிஷ் மகாராணியே ஆவார்.

2000 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியா குடியரசாக மாற வாய்ப்புக்கள் உள்ளதால் புதிய அரசமைப்புப்படி தெரிவு செய்யப்படவுள்ள புதிய ஜனாதிபதியே ஒலிம்பிக் விழாவை ஆரம்பித்து வைக்கும் உரித்துடையவராகிறார்.

எனினும் ஆஸ்திரேலியா குடியரசாக மாற வேண்டுமா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பது ஆஸ்திரேலிய ஒலிம்பிக் குழு அல்ல எனவும் ஆஸ்திரேலிய மக்களே அதைத் தீர்மானிப்பர் எனவும் ஒலிம்பிக் போட்டிகளுக்குப் பொறுப்பான அமைச்சர் மைக்கல் நைட் தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் 2ஆம் திகதி நடைபெறவுள்ள அந்நாட்டுப் பொதுத்தேர்தலில் தனது கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ஒலிம்பிக் விழாவைத் தானே ஆரம்பித்து வைக்கப் போவதாக தற்போதைய பிரதமர் ஜோன் ஹோவார்ட் தெரிவித்துள்ளார்.

ஆனால் தனது கட்சி ஆட்சிக்கு வந்தால் யார் அப்போது ஆஸ்திரேலியாவின் தலைவராக இருக்கிறாரோ அவரிடமே ஒலிம்பிக் விழாவை ஆரம்பித்து வைக்கும் பொறுப்பு வழங்கப்படும் என்று ஆஸ்திரேலிய எதிர்க்கட்சித் தலைவர் ஹிம் பிஸ்லி தெரிவித்துள்ளார்.

(இ-10)

---


பருத்தித்துறை

**நகராட்சி மன்றம்**

**ஆதன வரி அறிவித்தல் - 1998**

1998 ஆம் ஆண்டு, 3 ஆம் காந்தாயத்துக்கான ஆதன வரியை 30-09-1998 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி அலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப் பணத்துக்கு மேலதிகமாகக் கீழ்க் குறிப்பிடப்படும் விவரப்படி வெலியாத்துக் கட்டணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வெற்றுக் காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் —15%
ஏனைய காணிகள் —20%

காசோலையாகச் செலுத்த விரும்புவோர்: தலைவர், நகராட்சி மன்றம், பருத்தித்துறை என எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

வ. விசயரட்ணம்
தலைவர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
25-09-1998

(C/5009)


---

# அரபாத் - நத்தின்யாகு நியூயோர்க்கில் சந்திப்பு

## முட்டுக்கட்டையை நீக்க முயற்சி

ஜெருஸலம், செப். 29

பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத்தும் இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நத்தன்யாகுவும் இலங்கை நேரப்படி இன்று நியூயோர்க்கில் சந்தித்துப் பேச உள்ளனர்.

கடந்த சனிக்கிழமை நியூயோர்க் வந்த பலஸ்தீன தலைவர் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மெடலின் ஆல்பிரைட்டுடன் பேச்சு நடத்தினார்.

மத்திய கிழக்குப் பிரச்சினையில் தற்போது ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையை நீக்குவதற்கு பலஸ்தீன தலைவரும் இஸ்ரேல் பிரதமரும் நேரடியாகச் சந்திப்பது அவசியமானதாக அமெரிக்கா கருதுகிறது.

இந்த சந்திப்புக்கு முன்னதாக பலஸ்தீன தலைவர் ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார். இவ்வாரம் அவர் ஜனாதிபதி கிளின்ரனுடனும் பேச்சு நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்குக் கரையில் இருந்து இஸ்ரேல் படைகள் வாபஸ் பெறுவது தொடர்பாக அரபாத்துக்கும் நந்தன்யாகுவுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

மேற்குக் கரையில் உள்ள இஸ்ரேல் படைகள் மேலும் வாபஸ்பெறப்பட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது.

அதற்குப்பதிலாக மேற்குக்



கரையில் உள்ள முஸ்லீம் தீவிரவாதிகளுக்கு எதிராக பலஸ்தீன படைகள் கடும் நடவடிக்கை எடுக்கும் என்றும் அமெரிக்கா தெரிவித்திருந்தது.

மேற்குக் கரையில் இருந்து படைகளை வாபஸ் பெறுவதில் ஏற்பட்ட முட்டுக்கட்டை மத்தியகிழக்குப் பிரச்சினையில் இறுதித் தீர்வை எட்டுவதற்குத்தடையாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒஸ்லோ ஒப்பந்தத்தின் பிரகாரம் 1999 மே மாதம் மத்திய கிழக்கு சமாதனத் தீர்வு முழுமையாக எட்டப்பட வேண்டும்.

(இ)

---

# இந்திய, பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்கள் மீண்டும் பேச்சு நடத்துவர்

நியூயோர்க், செப். 29

காஷ்மீர் உள்ளிட்ட இருதரப்புப் பிரச்சினைகள் குறித்து அமைதியான முறையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண இந்தியாவும் பாகிஸ்தானும் ஒப்புக்கொண்டுள்ளன.

நின்றுபோய்விட்ட வெளியுறவுத்துறைச் செயலர்கள் அளவிலான பேச்சுவார்த்தையை அடுத்த மாதம் மீண்டும் தொடரவும் இருநாட்டுத் தலைவர்களும் முடிவு செய்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பும் ஐ. நா. பொதுச் சபைக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றிருந்தனர்.

இருநாட்டுத் தலைவர்களும் அங்கு சந்தித்துப் பேசினர். சுமார் ஒரு மணி நேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது.

பின்னர் வாஜ்பாய் நவாஸ் ஷெரீப் இருவரும் கூட்டாக ஓர் அறிக்கை வெளியிட்டனர். அதில் அவர்கள் கூறியுள்ளதாவது:

இந்தியாவுக்கும் பாகிஸ்

(9 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

குறோட்டன், பாம், சைப்பிரஸ், பான்சைப்பிரஸ், ஓறக்கேரியா, எக்ஸ்சோறா, பிறைட்லுவ் ஜப்பான் ஆகிய கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. பாக்கியநாதன், 152/2. கோயில் வீதி, யாழ்ப்பாணம். (59426)

---

எல்லா வகையான மோட்டார் சைக்கிள்களுக்கும் பூட்டக்கூடிய (Side bag) எம்மிடம் உண்டு. மழை காலம் பாதுகாப்பாக பொருள்களை எடுத்துச் செல்ல உகந்தது. தொடர்பு: கென்னடி மரியதாஸ், சிவராசா லேன், பலாலிவீதி, திருநெல்வேலி. (59487)

### வீடு விற்பனைக்கு

பாண்டியன்தாழ்வின் புங்கன்குளறோட் ஒழுங்கையில் (அன்னம்மாள் கோயிலுக்கு அண்மையில்) அமைந்துள்ள 2½ பரப்புக்காணியும், வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 261/11, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (59440)

---

மாகியப்பிட்டி சண்டிலிப்பாயில் அளவெட்டி றோட்டுக்கு, சமீபமாகக் காளி கோயில்ஒழுங்கையில், நான்கு அறைகளுடன் பிரயோசனமுள்ள ஆறுபரப்பு கல் வீடு வளவு கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ. இலகுநாதன், காளி கோயில் ஒழுங்கை, மாகியப்பிட்டி சண்டிலிப்பாய். (59480)

### விற்பனைக்கு உண்டு

8' 3'' அளவுள்ள சுருக்கு கேற்றுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 309, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [59449]

### இறைச்சிக்கோழி

பிறீமா [Prima] புறொயிலர் [Broiler] இறைச்சிக் கோழி 1½ Kg இல் இருந்து 4 Kg வரை விற்பனையாகிறது. சனிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். 5(17) கோவில் வீதி, யாழ்ப்பாணம். [59485]

### யாழ்ப்பாணம்

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய மூன்று நூல்களையும் வாங்குபவர்களுக்கு 20% கழிவுதரப்படும். நேரில்வருக, 30, கடைச்சாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (59450)

### இசை வகுப்புகள்

கீழைத்தேய மேலைத்தேய இசை வகுப்புகள் 30-09-98 அன்றுபிற்பகல் 5.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும். தொடர்பு: வாசுகிரங்கன், 16/2, கச்சேரி நல்லூர், வீதி, யாழ். நகர். (59441)

### பாலர் வகுப்பு

பெரிய மதவடி உடுவில் கிழக்கு சுன்னாகத்தில், 30-09-98 விஜயதசமியன்று பாலர் வகுப்பு ஆரம்பமாகும். தொடர்பு: ஞானக் குழந்தை இல்ல ஆசிரியை செல்விகு: விஜயலதா, பாலர் கல்விக்கழகம், யாழ்ப்பாணம். (59477)


## உதயம்

எம்மிடம்

**உள்நாட்டு வெளிநாட்டு**

தொலைத்தொடர்புகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம். எமது தொலைபேசி இலக்கத்தை வெளிநாடுகள், கொழும்பு ஆகிய இடங்களுக்கும் கொடுத்து இங்கிருந்து பேசலாம்.

எமது தொலைபேசி இலக்கம் 2392

**அத்துடன் வாடகைக்கு**

பீங்கான், ரம்லர். ஐஸ்கிறீம் கப்ஸ் கறிவாளிகள், சமையற் பாத்திரங்கள், கிடாரங்கள், பிளாஸ்ரிக் பாய்கள் பந்திப்பாய், இன்னும் பல

தொடர்பு:

**உதயம்**

172, பிரதான வீதி (மக்கள் வங்கி அருகில்) யாழ்ப்பாணம்.

[59491[


# மூன்று ப.நோ.கூ. சங்கக் கிளைகள் இயங்காததால் சங்கத்துக்கு நஷ்டம்

## ஊழியர் வேறு கிளைகளுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், செப். 29

தென்மராட்சி மேற்கு (கைதடி) ப.நோ.கூ. சங்கத்தின் மூன்று கிளைகள் இயங்காமையினால் மாதாந்தம் 55 ஆயிரம் ரூபா வருமானத்தை மேற்படி சங்கம் இழந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதடி வடக்கு, கைதடி மத்தி, கைதடி நவபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள கிளை நிலையங்கள் பாதுகாப்புக் காரணங்களினால் தற்போது இயங்குவதில்லை.

இக்கிளைகளில் கடமையாற்றும் ஊழியர்கள் ஏனைய கிளைகளுக்கு தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட கிளைகள் இயங்காமையினால் குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு ப.நோ.கூ. சங்க வேலைகளை வழங்க முடியாதுள்ளதாக சங்கத் தலைவர் சி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

தென்மராட்சி மேற்கிலுள்ள விவசாயிகளின் நன்மைகருதி களை நாசனிகளை ஏனைய கிளைகள் மூலம் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நவராத்திரிப் பொருள்களான சர்க்கரை, அவல், கடலை, பயறு, சீனி போன்ற பொருள்களும் கட்டுப்பாட்டு விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்த அவர் சங்க நடவடிக்கைகள் குறித்து மேலும் கூறியதாவது:-

சங்க அங்கத்தவர்களின் நன்மை கருதி தமிழ், ஆங்கில தட்டச்சுவேலைகள் குறைந்த கட்டணத்தில் சங்க தலைமையகத்தில் வைத்து செய்து கொடுக்கப்படுகின்றன. அத்துடன் ''போட்டோஸ்ரற்'' இயந்திரம் ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டு ''போட்டோஸ்ரற்'' பிரதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன.

சங்கப் பாவனையாளர்கள், அங்கத்தவர்கள் இதுதொடர்பான வேலைகளுக்கு தமக்கு அருகிலுள்ள சங்கக்கிளைகளுடன் தொடர்பு கொண்டால் உரிய வேலைகள் செய்து கொடுக்கப்படும்.

நீரிறைக்கும் இயந்திரங்கள் தேவையான விவசாயிகள் சங்கத்துடன் தொடர்பு கொண்டால் அவர்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் சங்கத்தால் மேற்படி இயந்திரங்கள் வழங்கப்படும்.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-5)

## மின் கம்பி திருட முயற்சி

நவாலி வடக்கு - புலவர் வீதியில் மின் கம்பி திருட முயன்ற இருவர் இனங்காணப்பட்டதுடன் கையும் மெய்யுமாக அகப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு இடம் பெற்றது. (இ-158)

## உதவிப்பணம்

நெடுந்தீவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கு எதிர்வரும் வியாழக்கிழமை தொடக்கம் நெடுந்தீவு தபாலகத்திலும் ஏனைய இரு உப - தபாலகங்களிலும் உதவிப்பணம் வழங்கப்படும். (இ)


## 8-ம் ஆண்டு நினைவலைகள்





அமரர் கந்தையா ஜீவரட்ணம் (குமார்)

திருமதி சுமதி ஜீவரட்ணம்

(வ. பி. போ. ச. மினிபஸ் சாரதி)

அன்னையின் மடியில் 17 - 07 - 1960

ஆண்டவன் அடியில் 28 - 09 - 1990

திதி: 29 - 09 - 1998

எட்டாண்டுகள் நிற்காமல் உருண்டு ஓடியாச்சு
விட்டகலா உங்கள் நினைவு எம் நெஞ்சில் நிலையாச்சு
திட்டமிட்ட வஞ்சகரின் கொடிய செயல் சதியாச்சு
சிட்டாகச் சிறகடித்த உங்கள் வாழ்வு சிதறிப்போச்சு
எட்டு ஆண்டுகள் எட்டாமல் ஓடி மறைந்தாலும்
பட்டுப்போன்ற உங்கள் பூமுகங்கள் எமைவிட்டு மறையாது!

உங்கள் பிரிவால் துயருறும்
ஐயா. அம்மா, சகோதரர்கள், சகோதரிகள், [illegible]

7, சென். மேரிஸ் 2ஆம், ஒழுங்கை, கொழும்புத்துறை. யாழ்ப்பாணம். (சி-4986)



**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.**

## VACANCIES

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 16 - 10 - 1998 for the undermentioned posts.

| FACULTY OF SCIENCE | Salary Scale |
|---|---|
| 01. Temporary Assistant Lecturer in<br>Botany<br>Chemistry<br>Computer Science<br>Mathematics & Statistics<br>Physics<br>Zoology | Rs. 8 075. 00 p. m. |
| 02. Temporary Demonstrator in<br>Botany<br>Chemistry<br>Physics<br>Zoology | Rs 7. 225. 00 p m. |
| 03. Temporary Instructor in<br>Mathematics & Statistics<br>Computer Science<br>Computer Unit | Rs 7. 225. 00 p. m. |

* Those who are awaiting the results of the final examination may also apply.

Application forms and other details may be obtained from the off.ce of the Assistant Registrar / Establishments (Academic). University of Jaffna Sri Lanka either in person or by sending a Money Order for Rs 20 per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of the Bursar University of Jaffna together with a self addressed stamped envelope 23 X 10 cm In size.

Applicants from the University System / Government Department / Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions.

Applications received after the Closing date will be rejected without intimation.

REGISTRAR

University of Jaffna
Jaffna.
1998 - 09 - 28. (G/5010)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### வலி. மேற்கில் 3 கிராம அலுவலர் பிரிவில்

# 75 குடும்பங்களுக்கு வீடு அமைக்க

# தலா 1 லட்சம் ரூபாவுக்கு பொருள்கள்

வலிகாமம்மேற்கு செப். 29

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் (ஜீ. ரீ. இ. சற்) வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 75 குடும்பங்களுக்கு வீடுகளை அமைப்பதற்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கட்டடப் பொருள்களை நன்கொடையாக வழங்கவுள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் யாழ். மாவட்ட புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஜேர்மன் அபிவிருத்தி வங்கி நிதியில் வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்கு வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பொன்னாலை, மூளாய், வட்டு. தெற்கு ஆகிய மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இருந்து ஆயிரத்து 500 ரூபாவுக்கு உட்பட்ட வருமானத்தையுடைய வீடுகள் சேதமடைந்த 75 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்தக் குடும்பங்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கட்டடப் பொருள்கள் நன்கொடையாக நிறுவனத்தினரால் வழங்கப்படவுள்ளன.

கட்டடப் பொருள்களை நன்கொடையாகப் பெறுகின்ற குடும்பங்கள் வீடுகளை அமைப்பதற்குரிய மேசன், தச்சுத்தொழிலாளர்களின் கூலிகளை மட்டும் செலுத்தி தமது பங்களிப்பைச் செலுத்த வேண்டும்.

(ஐ-175)

## நாதசுர தவில் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், செப். 29

இலங்கை இசைவேளாளர் சங்கத்தின் ஆதரவில் நாதசுர — தவில் பயிற்சி வகுப்பு எதிர்வரும் விஜயதசமியன்று இணுவில் மஞ்சத்தடி சிவசுப்பிரமணியர் தேவஸ்தான தெற்கு வீதியில் அமைந்துள்ள மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட உள்ளது.

கர்நாடக இசையை வளர்க்கும் நோக்குடனும், இளங்கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடனும் ஏற்கனவே மாதாந்த இசை நிகழ்வு மற்றும் பல்வேறு செயற்பாடுகளை இலங்கை இசைவேளாளர் சங்கம் மேற்கொண்டு வருகிறது.

இந்த வரிசையில் எதிர்வரும் விஜயதசமியன்று நாதசுர— தவில் பயிற்சி வகுப்பொன்றும் சங்கத்தால் ஆரம்பித்து வைக்கப்பட உள்ளது.

நாதசுர— தவில் கலைகளை அழியாது பாதுகாக்கவும், புதிய கலைஞர்களை உருவாக்கவும் இப்பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட உள்ளது.

விஜயதசமியன்று சங்கத் தலைவர் எஸ். ஆர். ஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும் வைபவத்தில் இப்பயிற்சி வகுப்பு சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைக்கப்படும்.

(இ-3)

## வெளிவாரிப் பரீட்சைகள்

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவினரால் நடத்தப்படும் கலைமாணி, வணிகமாணி இரண்டாம் வருடப் பரீட்சைகள் அடுத்த மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகும் என வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை வணிகமாணி மூன்றாம், நான்காம் வருடப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 10 ஆம் திகதி கோரப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

# காலாவதியான பிஸ்கட் இப்படியும் விற்பனை!

சுன்னாகம், செப். 29

பொதிசெய்த நிலையில் விற்பனை செய்யப்படும் பிஸ்கட் வகைகளில் காலாவதியான பிஸ்கட் பெட்டிகளை உடைத்துத் தனித்தனியாக போத்தல்களினுள் இட்டு விற்பனை செய்வதில் சில வர்த்தகர்கள் ஈடுபட்டு வருவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

காலாவதியான பொருள்கள் சுகாதாரக் கேடானதாக இருப்பதால் சுகாதாரப் பகுதியினர் வர்த்தக நிலையங்களில் சோதனை மேற்கொண்டு அவற்றைக் கைப்பற்றி அழித்து வருகின்றனர். இதையடுத்தே சில வர்த்தகர்கள் இவ்வாறு மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது

(ஐ-27)

## காலியில் 10 தமிழர் கைது

காலி நகரில் உள்ள நகைக் கடைகளில் வேலை செய்யும் 10 தமிழ் இளைஞர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நகைக் கடைப் பகுதியை சுற்றிவளைத்த பொலீஸார் அங்குள்ள தமிழர்களை விசாரித்து 10 தமிழ் இளைஞர்களைக்கைது செய்ததாகவும்—

மட்டக்களப்பைச் சேர்ந்த அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

(இ-3-21)

# வடமராட்சி மீனவருக்கு கடற்றொழில் உபகரணம்

செம்பியன்பற்று செப். 29

வடமராட்சி கிழக்குப்பகுதிகளில் உள்ள கடற்றொழிலாளர்களுக்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் 10 லட்சம் ரூபா செலவில் கடற்றொழில் உபகரணங்களை வழங்கவுள்ளது.

மாமுனை, குடத்தனை, மணற்காடு, செம்பியன்பற்று, தாளையடி, வத்திராயன் உட்பட 10 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கே இந்த உபகரணங்கள் மானிய அடிப்படையில் வழங்கப்பட உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

(இ-6-36)

### ஒக்ரோபர் முதலாம் திகதி

# சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி யாழ். நகரில் விசேட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 29

எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை சர்வதேச சிறுவர் தினமாகும்.

அத்தினத்தில் சிறுவர் உரிமைகள் மாவட்டக் கண்காணிப்புக் குழுவினர் ஐ நா. சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஆதரவுடன் நடத்தும் சிறுவர்தின நிகழ்வு யாழ். மத்திய கல்லூரியின் மாணவன் செல்வன உருத்திரசிகாம் தவபாலன் தலைமையில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற உள்ளது

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் பிரதம விருந்தினராகவும், ஐ நா. சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் திட்ட அலுவலர் திருமதி பெனிபுறூனி சிறப்பு விருந்தினராகவும இந்த நிகழ்வில் கலந்து கொள்வர்.

ஆரம்ப உரையை ஐக்கிய இராச்சிய சிறுவர்பாதுகாப்பு நிதிய யாழ். மாவட்ட இணைப்பாளர் செல்வி லிபி. கெனாட்டும், சிறப்புரையை யாழ் மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கமும் நிகழ்த்துவர்.

அன்றைய தினம் பரிசில் வழங்கும் நிகழ்வும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் சிறுவர் தின நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அங்கு நடைபெறும் போட்டிகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட உள்ளனர்.

(இ-8-9-109-139)

# சிரமதானமூலம் மயானம் திருத்த நடவடிக்கை

வலி. தென் மேற்கு செப். 29

நவாலி ஆரியம்பிட்டி மயானமும் அதனோடு இணைந்த வாய்க்கால் மற்றும் குட்டைகள் சிரமதானம் மூலம் திருத்தப்படவுள்ளன.

இத் திருத்த வேலைகளை இணுவில் மத்தியகல்லூரி சாரண மாணவர்களும், மானிப்பாய் இந்துக் கல்லூரி சாரண மாணவர்களும் இணைந்து செய்யவுள்ளனர் என்று சாரண ஆசிரியர் ரி. சந்திரகாசன் தெரிவித்தார்.

திருத்த வேலைகள் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளன.

இதில் 40 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதனை நவாலி விவசாய சம்மேளன நிர்வாகிகள் ஏற்பாடு செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-185)

# பாடசாலைக் கட்டட புனரமைப்பு ஆரம்பம்

வட்டுக்கோட்டை செப். 29

அராலி மேற்கு வள்ளியம்மை வித்தியாசாலை கட்டட புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பாடசாலையின் கட்டடம் மிகவும் பழுதடைந்து ஒருபக்கச் சுவர் இடிந்து விழுந்து பனை மரங்களால் கப்புகள் போடப்பட்ட நிலையிலேயே பாடசாலை இயங்கி வந்தது.

தற்போது கல்வித்திணைக்கள நிதிஒதுக்கீட்டில் இருந்து திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில் திருத்த வேலைகளுக்காக ஒப்பந்தகாரரால் பாடசாலையில் வைத்திருந்த ஒரு தொகை கொங்கிரீட் கற்கள் இரவுவேளையில் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

(இ-12)

## திருத்தப்படும் மாணவர் விடுதி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் மாணவர் விடுதி சுமார் 5 லட்சம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்தகால அனர்த்தங்களினால் சேதமடைந்த இந்த மாணவர் விடுதியின் திருத்தவேலைகள் அடுத்த மாத நடுப்பகுதியில் முடிவடையும் எனவும்—

அதன் பின்னர் மாணவர்களின் பாவனைக்காக இந்த விடுதி வழங்கப்படும் எனவும் — தெரிவிக்கப்படுகின்றது.

(இ-86)

## வாசகர் திருமுகம்

### நிறைகுடம் பற்றிய விளக்கம்

கும்பம் என்பது என்ன? அது எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பவற்றைக் கோயிற் கிரியைகளை அவதானிக்கும் போதே நமக்குப் புலப்படுகிறது. ஒரு கும்பமானது குடம், நீர், காசு, தேங்காய், மாவிலை, நூல், பட்டு, தருப்பை என்பவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டு வாழையிலையில் நெல்லோ, பச்சையரிசியோ, உப்போ அல்லது வேறு தானியமோ இடப்பட்டு அதன் மேல் வைக்கப்பட்டிருக்கும். அதற்கு மந்திரங்கள் மூலம் உயிரூட்டப்பட்ட பின்பே அது சக்தியைப் பெறுகின்றது. எனவே ஒரு சக்தியாக உருவாக்கப்பட்ட அந்தக் கும்பம் தெய்வத்திற்குச் சமானமானது. கும்பாபிஷேகக் கிரியைகளின் போது அச்சக்தி நூலின் மூலம் விக்கிரகத்திற்குச் செலுத்தப்படுவதை அவதானிக்கலாம். மற்றும் சாதாரண நிலைமைகளிலும் தெய்வத்தை நினைத்துத் தெய்வமாகப் பாவனை பண்ணிய கும்பத்தின் நீரை தெய்வத்திற்கு அபிஷேகிப்பார்கள், அல்லது கால் மிதிக்கப்படாத இடத்தில் ஊற்றுவார்கள்.

ஆனால் நிறைகுடம் என்பது வரவேற்புக்காக வைக்கப்படுவதாகும். இங்கு தெய்வத்தன்மை அக்கும்பத்திற்கு ஊட்டப்படுவதில்லை. அது வரவேற்கப்படுவதற்குரியதாகும். அதனை அவருக்கு வீதியில் அபிஷேகிப்பது பொருத்தமற்றது. எனவே கால்களில் ஊற்றி வரவேற்பார்கள். மங்கள நிகழ்வுகளின் போது வரவேற்பின் முக்கிய அம்சமாக நிறைகுடம் வைப்பார்கள். இவற்றைத் தெய்வத்தன்மையுள்ள கும்பத்திற்கு ஒப்பிடுவது பொருத்தமற்றது; நாம் வணங்கும் கடவுள் கல்லிலே செதுக்கப்பட்டிருப்பதனால் கற்கள் எதனையும் வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தாமல விடுகின்றோமா? கோயிலில் இருப்பது வணங்கும் கல். மற்றையவை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப் படுபவை. அதுபோன்று இவ்விருவகையில் வேறுபாட்டைக் காண்க.

தற்போது விசேட தினங்களில் கும்பம் வைக்கும் போது வழையிலையின் தலைப்பகுதி எந்தப் பக்கம் இருக்கவேண்டுமென்பதில் சிலஇடங்களில் சர்ச்சைப்படுவதனைக் காண்கின்றோம். நன்மைக் காரியங்களின் போது வாழையிலையின் தலைப்பகுதி கிழக்கே அல்லது வடக்கே இருத்தல் வேண்டும். கிழக்குத்திசை தேவர்களுக்கும், வடக்குத்திசை இறைவனுக்குமுரியதாகும். பிதிர்க்கருமங்களுக்கு வாழையிலையின் தலைப்பகுதி தெற்கு நோக்கி இருத்தல் வேண்டும். தெற்குத்திசை பிதிரர்களுக்கும் மேற்குத்திசை மனிதர்களுக்குமுரியதாகும்.

முருகேசு முரளிதரன்

கோப்பாய்.

### உள்ளூராட்சி ஓய்வூதியரின் அவலம்

சமூகத்தில் ஓய்வூதியக்காரர் தமது வாழ்க்கைச் செலவுக்கு ஓய்வூதியத்தினையே நம்பியிருக்கிறார்கள். வயோதிப காலத்தில் சாப்பாட்டுச் செலவு மட்டும் அல்லாது வைத்தியச் செலவுக்குங் கூட இந்த ஓய்வூதியத்தினையே நம்பி இருக்கிறார்கள்.

நான் ஓர் உள்ளூராட்சி ஓய்வூதியக்காரி. கடந்த சில காலங்களாக உள்ளூராட்சி ஓய்வூதியம் காலந்தாழ்த்தியே வருகின்றது. இன்றுவரை உள்ளூராட்சி ஓய்வூதிய வவுச்சர் வரவில்லை. கடைகளில் முதலாளிமார் எல்லோருக்கும் பென்சன் வந்தது. உங்களுக்கு வரவில்லையா? என்ற கேள்வி. வவுச்சர் வந்தால் கூட்டு நிதி வரவில்லை என்று வங்கியில் சொல்லுவார்கள்.

தயவு செய்து உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் நிலையை மேலதிகாரிகள் கவனிக்கக் கூடாதா? எமக்கும் மற்றைய ஓய்வூதியர்களின் வவுச்சருடன் எடுத்துத் தரக்கூடாதா? உள்ளூராட்சி ஓய்வூதியருக்கு ஏன் இந்த அவலநிலை? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனியாவது நடவடிக்கை எடுத்து உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் துன்பத்தைப் போக்க முன்வருவார்களா?

வட்டுக்கோட்டை. திருமதி த. இராஜசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிலுநர்கள் தேவை

கொழும்பிலுள்ள பிரபல நிறுவனமொன்றில்
போட்டோ பிரதி இயந்திரம், தட்டச்சு,
றோணியோ இயந்திரங்கள்

**திருத்துவதிலும், சேர்விஸ் செய்வதிலும்**
பயிற்சிபெற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொழில்நுட்பத் துறையில் ஆர்வமுடையவர்கள் அத்தாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பரதாரர்:

இல. 789, மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4954)


## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 22 — 01 — 1939

இறைவன் அடியில்: 10 — 09 — 1997

திருமதி
**ஜெகதீஸ்வரி நடராசா** (B.Sc )
(ஓய்வுபெற்ற ஆசிரியை.
மத்திய மகாவித்தியாலயம், வயாவிளான்)

திதி: 29 - 09 -1998

என்றும் நீங்காத நினைவுகளுடன்:
இ. நடராசா [கணவன்]

தேவாலய வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(59442)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சுபத்திரா தேவி குணசிங்கம்**

அன்னை மடியில் 01–07–1937
அம்பிகையின் திருவடியில் 10-10–1997

திதி: 29–09-1998

அம்பாளின் அருட் சோதியாய்
அவனியில் அவதரித்த
அன்பின் திருவுருவமே;
எம்மை வழி நடத்தி விட்டு
எங்கு சென்றாய் தாயே?
மீண்டும் வருவாயோ தாயே
உங்கள் அன்புமுகம் காட்ட!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

23, நாலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

[59460]

# இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர் பரீட்சைகளில் சித்தியடைந்தோர்

யாழ்ப்பாணம், செப். 29

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தினரால் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட இளஞ் சைவப்புலவர் மற்றும் சைவப் புலவர் பட்டப் பரீட்சை முடிவுகள் கடந்த 23 ஆம் திகதி வெளியாகின.

இம்முறை இளஞ்சைவப் புலவர் பரீட்சைக்குத் தோற்றிய 30 பேரில் 18 பேர் இரண்டாம், மூன்றாம் பிரிவுகளிலும், சைவப் புலவர் பரீட்சைக்குத் தோற்றிய 7 பேரில் 6 பேர் இரண்டாம், மூன்றாம் பிரிவுகளிலும் சித்தியடைந்துள்ளனர்.

இளஞ்சைவப் புலவர் பரீட்சையில செல்வி ஸ்ரீ. தட்சாயணி (நல்லூர்), பூ. நகுலன் (யாழ்ப்பாணம்) ஆகியோர் இரண்டாம் பிரிவிலும்—

செல்வி சி. தயாளினி (சுழிபுரம்), செல்வி சு. தவராணி (சுழிபுரம்), செல்வி செ. இந்திரா (நீர்வேலி), செல்வி நா. ஜெயகௌரி (நீர்வேலி), செல்வி ப. தமிழ்ச்செல்வி (நீர்வேலி), செல்வி செ. சிவப்பிரியா (கொக்குவில்), செல்வி சி. விஜயகௌரி (பண்டத்தரிப்பு).

ஏ. அனுசாந்தன் (குப்பிளான்), செல்வி க. கங்காதர்சினி (யாழ்ப்பாணம்), செல்வி வ. திலீபா (யாழ்ப்பாணம்), செல்வி இ. சசிகலா (வட்டுக்கோட்டை), செல்வி செ. சுகிர்தா (சங்கானை).

நி. தசீதரன் (மானிப்பாய்), பா. ஸ்ரீபவன் (சங்கானை), திருமதி ப. லதீஸ்வரி (யாழ். பல்கலைக்கழக ஆனந்தக் குமாரசுவாமி விடுதி), செல்வி த. சுகந்தி (யாழ்ப்பாணம்) ஆகியோர் மூன்றாம் பிரிவிலும் சித்தி அடைந்துள்ளனர்.

சைவப்புலவர் பரீட்சையில் இ. நித்தியானந்தன் (திருநெல்வேலி), செல்வி ம. விமலரஞ்சினி (கொடிகாமம்), க. நடராசா (கைதடி) ஆகியோர் இரண்டாம் பிரிவிலும் —

ப. சாந்தகுமார் (அளவெட்டி), க. மணிமாறன் (வட்டுக்கோட்டை), சி. பாலமுரளி (கரவெட்டி) ஆகியோர் மூன்றாம் பிரிவிலும் சித்தி அடைந்துள்ளனர்.

1999 ஆம் ஆண்டுக்கான பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் கடைசி வாரத்தில் இடம் பெறவுள்ளதாகவும் — பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோர் 125/5, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள பரீட்சைக் காரியாலயத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் — பரீட்சைக் காரியதரிசி சைவப்புலவர் வ. கந்தசாமி அறிவித்துள்ளார். (இ-7)

## மண்டபம் புனரமைப்பு

நெல்லியடி, செப். 29

பல வருடகாலமாக சேதமடைந்திருந்த தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய பிரார்த்தனை மண்டபம் சுமார் ஆறு லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (இ-109)

## பிரிவுபசார விழா

தென்மராட்சி, செப் 29

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளராகக் கடமையாற்றி யாழ் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாச பொதுமுகாமையாளராக பதவியுயர்வு பெற்றுச் செல்லும் சி. சிவபாலசுப்பிரமணியத்துக்கு சங்க இயக்குநர் சபையினரால் கடந்த சனிக்கிழமை பிரிவுபசார விழா சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் இ. இராசகுலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. (இ–117)

## வீதி சேதம்

தென்மராட்சி, செப். 29

கச்சாயிலிருந்து கொடிகாமத்துக்கும சாவகச்சேரிக்கும் செல்லும் வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளதால் வாகனங்களில் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

பல இடங்களில் பாரிய பள்ளங்கள் ஏற்பட்டுள்ளதால் மழைக்காலம் ஆரம்பிக்கு முன்னர் இந்த வீதிகள் திருத்தப்படாவிடின் மேலும் மோசமாக சேதமடையலாமெனவும், விபத்துகள் ஏற்படலாமெனவும் தெரிவிக்கப்பட்டது. (இ–117)

## கலை நிகழ்ச்சி

நெல்லியடி, செப். 29

உடுப்பிட்டி நாவலடி பாலர் பாடசாலைக் கட்டட நிதிக்காக மாபெரும் கலை விழா எதிர்வரும் ஒன்பதாம் திகதி இரவு 8 மணிக்கு நடைபெறவிருக்கின்றது. இவ்விழாவில் 14 வயதுக்கு உட்பட்ட பாடசாலை மாணவிகளின் ''காத்தவராஜன்'' சிந்து நடைக்கூத்து இடம் பெறும். (இ–109)

## சீருடைத் துணி விநியோகம்

தென்மராட்சி, செப். 29

மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு எட்டு வருடங்களின் பின்னர் சீருடைத் துணிகள் வழங்கப்பட்டுள்ளன.

1997, 1998 ஆம் ஆண்டுகளுக்குரிய சீருடைத் துணி [illegible] வைத்தியசாலையில் வைத்து அவர்களுக்கு வழங்கப்பட்டன. (இ-117)

## பழைய மாணவர் உதவி

மானிப்பாய், செப். 29

மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களுக்கான சைக்கிள் பாதுகாப்பு கொட்டகையை பெற்றோர் சங்கம் அண்மையில் அமைத்துக் கொடுத்துள்ளது.

இதே வேளை இக்கல்லூரியின் கனடாவில் உள்ள பழைய மாணவர் சங்கம் பாடசாலை அபிவிருத்திக்கென 2 ஆயிரம் டொலர் பணமும் அனுப்பி வைத்துள்ளதாக பழைய மாணவர் சங்க செயலாளர் ந. விவேகானந்தராசா தெரிவித்துள்ளார். (இ-90)

# வங்கிக்கடன் தாமதமடைவதால் விவசாயிகள் பலர் திண்டாட்டம்

வலி. தென்மேற்கு, செப். 29

மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையில் ரூபா 10 ஆயிரம் விவசாயக் கடனுக்கு விண்ணப்பித்த விவசாயிகள் உரிய காலத்தில் கடன் கிடைக்க ஆவன செய்யுமாறு கேட்டுள்ளனர்.

நெற் செய்கைக்கான வங்கிக் கடன் உரிய காலத்தில் கிடைத்தால் தான் கிருமி நாசனி, உரம் மற்றும் உழவு வேலைகளைச் செய்யலாம் என நவாலி வடக்கைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

வங்கிக் கடனுக்குவிண்ணப்பித்து ஒரு மாதமாகியும் பலருக்கு கடன் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

விவசாய சம்மேளனங்களினால் சிபார்சு செய்யப்பட்டவர்களுக்கே இதுவரை வங்கிக் கடன் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது. (இ-185)


## லிங்கம் தொலைத் தொடர்பு சேவை

மானிப்பாய் வீதி, தாவடி.

- ★ 01-10 98 தொடக்கம் விசேட சலுகை,
- ★ வெளிநாட்டுத் தொடர்புகளைப் பெற ரூபா 80 மட்டுமே.
- ★ வெளிநாட்டிலிருந்து வரும் தொடர்புகளுக்கு நிமிடத்துக்கு ரூபா 5 மட்டுமே.
- ★ யாழ். நகரில் 'கதிரவனி'ல் இதே சலுகைகளுடன் எங்கள் சேவையைப் பெறலாம்.

கதிரவன்,
144, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(59482)

தென்மராட்சி கிழக்கு
**ப. நோ. கூ. சங்கம்**
(வ.உ)

## வெற்றுச் சாக்கு, வெற்றுப் பை விற்பனை

4,100 வெற்றுச் சாக்குகளும், 32,200 வெற்றுப் பைகளும் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்குண்டு. மீளப் பெறக்கூடிய வைப்புப்பணம் ரூபா 150 செலுத்தி கேள்வி விண்ணப்பங்களை 08 – 10 – 98 ஆம் திகதி நண்பகல் 12–00 மணிக்கு முன் பொது முகாமையாளர், தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம், கொடிகாமம் என விலாசமிட்டு அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்
தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்,
கொடிகாமம்.

23 - 09 - 1998.

(சி/5008)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## அறுதியான வாழ்வு

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிகளில் வாழும்மக்கள், நிவாரணம் பெறவேண்டுமானால். இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார் பிரதேசங்களுக்கு வர வேண்டும் என்பது அரசாங்கத்தின் பிந்திய நிபந்தனை.

வன்னிப் பிரதேசத்தில் வாழும் மக்களின் (இவர்களில் 99 சத வீதமானோரும் இடம்பெயர்ந்து அகதிகளாகி உள்ளவர்கள்) நிவாரண வெட்டை வாபஸ் பெறுவதில்லை என்று அரசாங்கம் அழுங்குப் பிடியாக-திமிர்த் தனமாக— நிற்பது தெரிந்ததே.

நிவாரண வெட்டை ரத்துச் செய்யுமாறு கோரி வன்னிப் பிரதேச மக்கள் ஒன்றரை மாதங்களுக்கு மேலாக அரச செயலகங்களின் முன்னால் மறியல் போராட்டம் நடத்தினார்கள். அரசாங்கம் மசியவில்லை; தமிழர்பால் தனக்கு மனிதநேயம் தானும் இல்லை என்பது போலப் பாராமுகமாக இருக்கிறது.

இதனைக் கண்டு வன்னி வாழ் மக்கள் — அகதிகள் கடந்த பல நாள்களாக கிளிநொச்சி, முல்லைத்தீவுச் செயலகங்களின் முன்னால் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அதுவும் அரசாங்கத்தின் கண்ணுக்குத் தெரியவில்லை. உண்ணாவிரதம் இருக்கும் அகதிகளில் பலர் இறந்தாலும் அரசு தெரியாதது போலவே நடித்துக்கொள்ளும் என்று எண்ணுமளவுக்கு கண்ணை மூடிக் கொண்டிருக்கிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் — அகதிகள் — மன்னாருக்கு வந்தால் மட்டுமே நிவாரணம் என்ற அரசின் நிபந்தனை, போரில் மக்கள் மீது உணவை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி அவர்களைச் சாகடிக்கும் நோக்கமுடையது என்றே கொள்ள வேண்டும்.

அரசாங்கம் விரும்புவது போல, யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் இரண்டு லட்சம் பேரையும் உடனடியாக மன்னாருக்கு வருவிப்பது, இலகுவான பணி அல்ல என்று முல்லைத்தீவு அரச அதிர் நடைமுறைப் பிரச்சினைகளை விளக்கியுள்ளார். ஆனால் அவரது விளக்கத்தை — கஷ்டங்களை — கருத்திற் கொண்டு தனது முடிவை மாற்றும் நிலையில் அரசு இல்லையே!

தமிழர்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில், வேறு எல்லா அரச இயந்திர அலகுகளையும் விட, பாதுகாப்பு அமைச்சே 'ஆட்சி' நடத்துகிறது! அந்த அமைச்சின் அதிகாரிகள் வைத்ததுதான் சட்டம்! ஏன், என்று திருப்பிக் கேட்க எவருமில்லை; அதற்கான துணிவும் எவரிடமும் இல்லை.

இன்னும் சற்று விளக்கமாச் சொல்வதானால், இலங்கை வாழ் தமிழ்ப் பிரஜை ஒவ்வொருவரினதும் வாழ்க்கையே பாதுகாப்பு அமைச்சின் முடிவுகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் அறுதியாக்கப்பட்டுள்ளதான; அடிமைப்படுத்தப்பட்டுள்ளதான நிலையே உண்டு. தமிழர்கள் அனுபவிக்கும் வாழ்க்கைச்சுதந்திரம் இவ்வளவு தான்!

# சத்தியம், தர்மம், சாந்தி, அன்பே

# வாணி பூசையின் குறிக்கோள்

''அறிவின் அந்தம் ஞானம்
பண்பாட்டின் அந்தம்
பூரணத்துவம்
ஞானத்தின் அந்தம்
விடுதலை
கல்வியின் அந்தம் சீலம்''

என்கிறார் - ஸ்ரீசத்ய சாயி பாபா.

உலகியல் அரங்கில் மக்களுக்கு வேண்டிய முக்கிய மூன்று பொருள்களாகிய வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றைப் பெறுவதற்காக அவ்வவற்றிற்குரிய சக்திகளை வழிபடுவதே நவராத்திரி விரதமாகும் என்பது ஒரு பொது விளக்கமாகும். ஆனால் நுண்ணிய சிந்தனையில், பொறி வழி செல்லும் குறியற்ற அறிவை நெறிப்படுத்த இவ்விரதம் உதவுவதோடு வெள்ளியசிந்தனையை உள்ளத்தில் பெருக்கி உணர வைக்கிறது என்பதே அறிஞர்கள் கூறும்கருத்தாகும்.

பெற்றோர் தமது பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்பதில் மிகவும் அக்கறையாக இருக்கிறார்கள். எத்தகைய கல்வியைத் தம்பிள்ளைகள் பெறவேண்டுமென்பது அவர்களுக்கும் புரியவில்லை; கல்வியை வழங்குவோருக்கும் முழுமையாகத் தெரியவில்லைப் போலும் என்பது ஒரு கணிப்பாகிறது. தற்காலக்கல்விமுறை மாணவரிடத்தில் சத்தியம், தர்மம் சாந்தி, அன்பு, துன்பம்செய்யாமை போன்ற சீரிய குண நலன்களை வளர்க்கத் தவறிவிட்டது என்று பலரும் கருதுகின்றனர்.

மனிதமேம்பாட்டிற்கான மனிதப் பெறுமானங்களை வளர்த்தெடுப்பதில் கல்வி அக்கறை காட்டுதல் வேண்டும். இன்றைய இந்த மோசமான நிலைக்கு யார் காரணம்? படித்தவர்களிடம் ஒழுக்கம் அருகியிருப்பதற்கும் யார் காரணம்? மாணவர்கள் பொறுப்பற்று நடப்பதற்கு யார் காரணம்? மாணவர்களைப் பிழை சொல்வது தவறு மாணவர்களின் தேவைகளையோ அல்லது அவர்களின் உணர்வுகளையோ பெற்றோரும் ஆசிரியர்களும் புரிந்துகொள்கிறார்களில்லை. இதனால் மாணவர்கள் இவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கப்பின்னிற்கிறார்கள்.



கல்வியானது பய பக்தியையும், நம்பிக்கையையும் ஊட்ட வேண்டும். பயம் என்பது எடுத்ததற்கெல்லாம் பயந்து நடுங்குவதல்ல கீழ்ப்படிவைக் குறிக்கிறது. பக்தி என்பது ஒருவர் தம்மினும் உயர்ந்தவர் பால் வைககும் மரியாதையாகும். பய பக்தி உள்ளவன் தீய செயல்களைச் செய்ய அஞ்சுவான். இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுவான். நம்பகமானவனாகவும் இருப்பான். நம்பிக்கை பலப்பட்டால்தான மற்றவர்களும் ஒருவரை நம்பி அவருடைய காரியங்களுக்கு நம்பிக்கையாகக் கைகொடுத்து உதவுவார்கள்.

நா. சண்முகநாதபிள்ளை

''சத்தியம்'' என்பது உயிரோட்டம், அல்லது ஜீவதத்துவமாகும். அதுவே தெய்வீகம். ஒவ்வொரு பொருளினதும் அடித்தளமான உண்மையும் அதுவே. அனைத்தும் ஒன்று என்பதே உண்மையின் சாரம். சத்தியம் செயலுருப் பெறும்போது ''தருமம்'' அல்லது அறமாகிறது. ஆசை அறுந்த நிலையே அறத்தின் தோற்றுவாயாகும். ''சாந்தி'' என்பது உணர்ச்சிகளின் சம நிலையைக்குறிக்கும். 'அன்பு' என்பது உடலுக்குள் உள்ள தெய்வீகத்தின் வெளிப்பாடு. இது ஆற்றலின் ஒருவடிவம். இது கொடுக்கக் கொடுக்கப் பெருகும். துன்பம் செய்யாமை என்பது எல்லாவற்றையும் ஒன்றாக நினைத்துப் பார்த்து சமநோக்கோடு அன்பு செய்து தழுவி நிற்றலாகும். ஒருவரின் ஆத்மீக பலமும் தளமும் இதன் பிறப்பிடமாகும். ''அன்பே இன்ப ஊற்று அதன் விரிவே துன்பம் செய்யாமை என்னும் அகிம்சை.''

இவையெல்லாம் மனித விழுமியங்களாகி மனித மேம்பாட்டையும் புனிதத்தன்மையையும் பேண, ஆசிரியர்கள் தங்கள் பாடத்திட்டங்களோடு இணைத்துப் பள்ளித்தலங்களில் சொல்லித்தரக் ''கல்விப் பெருஞ் செல்வப் பேறாகிய'' சகல கலா வல்லியைவேண்டி நிற்போமாக.

''மந்திரத்தைமுணுமுணுத்தேட்டை வரிசையாக அடுக்கி அதன் மேல் சந்தனத்தை மலரையிடுதல் சாத்திரம்; அவள் பூசனையன்றாம்'' என்றார் சுப்பிரமணிய பாரதியார்.

''இறவாத இன்ப அன்பு காட்டி'' கல்வி அழகு ஈகவரப் பெறவும், பல்விதமான கலை வளம் கதித்தோங்கவும், தளர்வறியா மனத்தோடு, கல்வியறிவு உடையார் முன் அவ்வறிவு இல்லாதவர்களாக கையேந்தி ஏங்கி நிற்கும் எம் சிறார்களுக்குக் கல்வியூட்டிக், கண்ணுடைய வாழ்வு வந்து, நல்ல சால்பும், சீலமும் ஐசுவரப்பற்றவர்களாக ஆக்குவதையுமே வாணி பூசையாக நாம் ஏற்றுக் கொள்வோமாக.

★

# புனரமைப்பு பணிகளுக்கு தேவையான

# தொழில் நுட்பம்சார் மனித வளமில்லை

## அதனை உருவாக்க ஆக்க பூர்வ செயற்பாடு தேவை

### நடந்ததும் நடவாததும்-7

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட மீளக்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வுத்திட்டங்கள், செயல் முறைகள் குறித்த கண்ணோட்டம் ஒன்றை யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அண்மையில் அறிக்கை வடிவத்தில் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மக்கள் நலன் — வசதி— கருதி நடந்ததும் நடைபெறாததும் குறித்துப் புள்ளிவிவரங்களுடன் விலாவாரியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப கண்ணோட்ட அறிக்கை உதயனில் பகுதி பகுதியாக அவ்வப்போது வெளிவரும்.

யாழ்ப்பாண மக்கள் கல்வியை தங்கள் செல்வங்களில் முக்கியமான ஒன்றாகக் கருதுகின்றார்கள். எழுத்தறிவு வீதம் மிகவும் உயர்ந்து காணப்பட்டது. தற்பொழுது பாடசாலை செல்லாத பிள்ளைகளின் எண்ணிக்கை பல இடங்களில் உயர்ந்து கொண்டு செல்லும் நிலையைக் காணக் கூடியதாக உள்ளது. இதற்கான முக்கிய காரணங்கள் பாதிப்புக்குள்ளான குடும்பங்களின் வறுமை நிலையும் சமூக ரீதியான உதவிகள் கிடையாமையுமே ஆகும்.

முன்னைய காலங்களிலும் பார்க்க கல்வியின் தரம் தற்பொழுது குறைந்து காணப்படுகிறது. இதற்குக் காரணம் மாணவர்களினதும் குடும்பங்களினதும் விரக்தியுற்ற வாழ்வே ஆகும். உயர்கல்வியைத் தொடரும் ஆர்வம் மாணவர் மத்தியில் குறைவாகவே காணப்படுகிறது. க. பொ. த. சாதாரண தரம், க. பொ. த. உயர் தரம் ஆகிய பரீட்சைப் பெறுபேறுகள் கீழ் நோக்கிச் செல்வதைக் காணக் கூடியதாக உள்ளது.

ஆசிரியர்கள் வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை; கல்விக்கான வசதிகளாகிய நூலகம், ஆய்வுகூடம் ஆகியன தகுந்த தரத்தில் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

பாதிக்கப்பட்ட கட்டடங்கள் முழுமையாக திருத்தி அமைக்கப்படவில்லை; அத்துடன் சேதமடைந்த தளபாடங்களுக்கு பதிலாக தளபாடங்கள் வழங்கப்படவில்லை, பல பாடசாலைகளில் வகுப்பறைகள் தொடர்ந்தும் தற்காலிக கொட்டகைகளிலேயே நடைபெறுகின்றன. பாதுகாப்பு வலயம் காரணமாக பல பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள 490 பாடசாலைகளில் சுமார் 400 பாடசாலைகள் பாதிப்படைந்துள்ளன. பாதிப்புகள் பற்றிய அண்ணளவான ஒரு மதிப்பீடு 100 கோடி ரூபாவையும் தாண்டியுள்ளது. ஜேர்மன் தொழில் நுட்ப ஸ்தாபனம் 8 பாடசாலைகளின் சில பகுதிகளைத் திருத்துவதற்காக 2 கோடியே 50 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. கல்வித் திணைக்களத்தின் 1997 ஆம் ஆண்டின் செலவு 1 கோடி ரூபா மட்டுமே ஆகும் யு. என். எச். சி ஆர் சிறிய திட்டங்களின் கீழ் 63 லட்சம் ரூபாவை 13 பாடசாலைகளுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது, யுனிசெவ் சுமார் ஆரம்ப பாடசாலைகளில் மலசலகூடம், கிணறுகள் அமைத்துக் கொடுத்தது. அத்துடன் வலிகாமம் பகுதியில் நான்கு ஆரம்ப பாடசாலைகளில் திருத்த வேலைகளையும் மேற்கொண்டது.

பாதிப்புகள் பாரியனவையாக இருப்பதால் தனி ஒரு பணம் வழங்குநர் முழு வேலைகளையும் மேற்கொள்ளமுடியாது. ஆகையால் பாதிப்புகள் முழுமையாக மதிப்பீடு செய்யப்பட்டு பணம் வழங்குவோர் பலரின் ஆதரவுக்காக முன்வைக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலை வேலைகள் அலுவலகம், யாழ். குடாநாட்டில் உள்ள சகல பாடசாலைகளினதும் திட்டம், மதிப்பீடு நிர்மாணித்தல், பராமரிப்பு வேலைகளைக் கையாளும் அதிகாரம் கொண்ட ஓர் அத்தியட்சகர் தர அலுவலகமாகத் தரம் உயர்த்தப்பட வேண்டும்.

குடாநாட்டின் கல்வித், தரப் பரிமாணத்தைஏனைய மாகாண பாடசாலைகளின் தரத்துக்கு சமமாக உயர்த்துவதற்கு நவீன கல்வி வசதிகளும் அவசியமாகும்.

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரிக்கு, போர்க்காலத்தில் கட்டடங்களுக்கு பாதிப்பு, தளபாடங்களுக்கு சேதம் அல்லது இழப்பு போன்ற பாரிய பாதிப்புகள் ஏற்பட்டன. திணைக்களத்தால் அண்மைக் காலத்தில் கட்டடங்களுக்கு புனருத்தாரண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தேவைப்படும் உபகரணங்கள் வழங்கப்படுவதற்காக யு. என் டி. பி பண ஒதுக்கீடு செய்துள்ளது. கல்லூரியின் பிரதான வழி இவ்வறிக்கை வெளியிடப்பட்ட போது மூடப்பட்டே உள்ளது பின் பக்க வழியே பாவிக்கப்படுகிறது. மாணவர்கள் இந்த ஒழுங்கை விரும்பவில்லை.

மனித வள மேம்பாட்டுக்கு அவசரமாக தேவைப்படும் தொழில் நுட்பக் கல்விக்கு புத்துயிர் ஊட்டுவதற்காக சக்தி வாய்ந்த நடவடிக்கைகள் அவசியமாகும்.

*யாழ் பல்கலைக்கழகம்*

கட்டடங்கள்திருத்தவேலைகள், ஆய்வு கூட உபகரணங்கள் மீள வைத்தல், ஆகியவைக்கான விசேட மானியம் வழங்கப்படவில்லை, இவைகள் யாவும் சாதாரண ஒதுக்கீடுகளில் இருந்தே பூர்த்தி செய்யப்படுகின்றன. ஆனால் இந்தச் சாதாரண ஒதுக்கீடு வழமையான கல்விசார் கற்கை நெறிகளை நடத்துவதற்கான செலவுகளுக்கே பற்றாக்குறையாக உள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

**நாளை**

புரட்டாதி - 14
புதன்கிழமை
திதி: நவமி
முற்பகல்: 10.52 வரை.
நட்சத்திரம்: உத்தராடம்
பின்னிரவு 03.59 வரை.
விஜயதசமி நாள்
சுபநேரம்: 04.32 - 06.02
ராகுகாலம்: 12.02 - 01.32
(பகலுக்கும் இரவுக்கும் பழமைநேரப்படி)

**உதயவாக்கு**

பணிவுள்ள அன்பு தான் சுவர்க்க வாயிலைக் [illegible] செருக்குள்ள விஞ்ஞானம் அறிவன்று.

- யங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதி மஹாநாம கைது செய்யப்பட்டதன் பின்னணியில் பழிவாங்கும் நோக்கம்!

## நீதித்துறை வட்டாரங்கள் விசனம்

மேல் நீதிமன்ற நீதிபதி மஹாநாம திலகரத்ன பொலீஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவம் சட்டத்துறையைச் சேர்ந்தவர்களிடையே பெரும் மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவத்தின் பின்னணியில் சட்டமா அதிபரே செயற்பட்டார் எனக் கூறப்படுவதை அடுத்து அவருக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது.

இந்தச் சம்பவம் எவ்வாறு நடந்தது? இதன் பின்னணி என்ன? என்பன குறித்து ''ராவய'' சிங்கள வார இதழில் வெளியான தகவல்களின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

சிறிலங்காவின் நீதித்துறையின் முதல்வரான சட்டமா அதிபரின் பதவியே ஆட்டம் காணும் விதத்தில் அமைந்துள்ளது. மேல் நீதிமன்ற நீதிபதி மஹாநாம திலகரத்ன குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் பந்துல விக்கிரமசிங்காவினால் கைது செய்யப்பட்டதும், அதன் பின்னணியில் இடம்பெற்ற சம்பவங்களும்.

மேல் நீதிமன்ற நீதிபதி ஏன் கைது செய்யப்பட்டார்? எந்தச் சூழ்நிலையில் கைது செய்யப்பட்டார்? எவருடைய தேவைகளுக்காகக் கைது செய்யப்பட்டார்? கைது செய்தவர்களுக்கு 'நீதிபதியை சட்டபூர்வமாக கைது செய்யும் அதிகாரம் உள்ளதா? என்பன குறித்து இங்கு கவனிப்போம்.

மேல் நீதிமன்ற நீதிபதி மஹாநாம திலகரத்தினை கைது செய்யப்பட்ட வேளையில் அவரைக் கைது செய்யுமாறு கெஸ்பாவ நீதிவானால் விடுக்கப்பட்டிருந்த பிடியாணை மீண்டும் அந்த நீதிவானால் ரத்துச் செய்யப்பட்டிருந்தது குறித்து தான் அறிந்திருக்கவில்லை எனவும் —

நீதிவானால் விடுக்கப்பட்ட பிடியாணை ரத்துச் செய்யப்பட்டிருந்தால் அந்த வேளையில் கைதை மேற்கொள்வது சரியானதாகவோ அல்லது சட்ட பூர்வமானதாகவோ இராது எனவும்— சட்டமா அதிபர் தெரிவித்துள்ள கருத்தானது குற்றப் புலனாய்வுப் பணிமனையைச் சேர்ந்த இந்த விசாரணைகளுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்குகடும் சினத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

நீதிபதி மஹாநாம திலகரத்னாவுக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து அவர் கைது செய்யப்படும் வரை அனைத்து நடவடிக்கைகளும சட்டமா அதிபரின் பணிப்பின் பேரிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதே குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் நிலைப்பாடாகும்.

தனது பெயரைக்குறிப்பிட விரும்பாத குற்றப் புலனாய்வுப் பணியக அதிகாரி தெரிவிக்கும் கருத்துப்படி அந்தப் பணியகத்தைச் சேர்ந்த பொலீஸ் அத்தியட்சகர் பிரேமரத்ன தலைமையில் 9 பேர் அடங்கிய பொலீஸ் குழு ஒன்று கடந்த 9 ஆம் திகதி நீதிபதி மஹாநாம திலகரத்னவைக் கைது செய்வதற்காக கஹதுடுவவில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்றுள்ளது.

அப்போது தன்னைக்கைது செய்யுமாறு கெஸ்பாவ நீதிவானால் விடுக்கப்பட்ட பிடியாணை ரத்துச் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்த நீதிபதிமஹாநாம திலகரத்ன அந்த ரத்து உத்தரவின் பிரதியையும் காண்பித்துள்ளார்.

அதை அடுத்து கைது செய்யச் சென்ற பொலீஸ் குழுவின் தலைவர் பொலீஸ் அத்தியட்சகர் பிரேமரத்ன திரும்பிச் சென்று அது குறித்து குற்றப் புலனாய்வு தொடர்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் புண்ணிய டி சில்வாவிடம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் சட்டமா அதிபருக்குத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து சட்டமா அதிபரின் உத்தரவுக்கு இணங்க மூத்த பொலீஸ் அத்தியட்சகரான பந்துல விக்கிரமசிங்கா நீதிபதி மஹாநாம திலகரத்னவைக் கைது செய்வதற்கு அனுப்பப்பட்டார்.

ஐ.தே. கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக — அரசாங்கத்தின் தேவைக்காக — சட்டமா அதிபரால் தொடுக்கப்பட்ட வழக்கில் நீதிபதி மஹாநாம திலகரத்ன எதிரியை விடுதலை செய்ததற்கு பழிவாங்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தன்னால் விடுக்கப்பட்ட பிடியாணை ரத்துச் செய்யப்பட்ட நிலையில் அதைக் கவனத்தில் கொள்ளாது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிபதி மஹாநாம திலகரத்தினவைக் கைது செய்துள்ள சம்பவமானது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும் என கெஸ்பாவ நீதிவான் முனிதாச நாணயக்கார மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசருக்கு கடந்த 16ஆம் திகதி அறிவித்துள்ளதுடன் 17 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதிமன்றத்திலும் தெரிவித்துள்ளார்.

### ராஜித சேனாரத்ன மீதான வழக்கு

காலாவதியான ரசாயனப் பொருள்களை விமானப் படைக்கு விநியோகித்து 9 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டி சட்டமா அதிபரால் ஐ. தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னாவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்து கடந்த மே மாதம் 28 ஆம் திகதி நீதிபதி மஹாநாம தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கு வேண்டுமென்றே சோடிக்கப்பட்ட வழக்கு எனவும் நீதிபதி தெரிவித்திருந்தார்.

சிக்கலுக்குள்ளாக்கும் விதத்தில் தனது வாய் முறைப்பாடு பெறப்பட்டுள்ளது எனவும் —

அந்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே சாட்சியமளிக்க வேண்டும் எனத் தன்னை சட்டமா அதிபர் பணிமனைக்கு அழைத்து மூத்த அரச சட்டத்தரணிகள் இருவர் எச்சரித்தனர் எனவும் இந்த வழக்கின் முக்கிய சாட்சியான விமானப் படையைச் சேர்ந்த கோப்ரல் மஹிபால பண்டார நாயகா சத்தியக் கடதாசி மூலம் நீதிமன்றத்துக்குத் தெரிவித்திருந்தார்.

அந்த சத்தியக் கடதாசியில் ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயங்கள் இருந்ததை அடிப்படையாகக் கொண்டு முறைப்பாட்டுக் காரர்களின் சாட்சியங்கள் முடிவடைந்ததும் எதிர் தரப்புச் சாட்சிகளை அழைக்காமலேயே ராஜித சேனாரத்னாவை நீதிபதி மஹாநாம விடுதலை செய்தார்.

சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நீதிபதி மஹாநாம சோடிக்கப்பட்ட வழக்கு எனத் தெரிவித்து ராஜித சேனாரத்னாவை விடுதலை செய்தது சட்டமா அதிபருக்கு சினத்தை ஏற்படுத்தியுள்ளது.

### பொலீஸாருக்கு முறைப்பாடு

1998 ஜூன் 1 ஆம் திகதி உயன்கேவகே நிரோஷினி சோமசந்திரா என்ற பெண், மேல் நீதிமன்ற நீதிபதி மஹாநாம திலகரத்னவின் மகனும்வீட்டுப் பணியாளரும் இராணுவக் கோப்ரலான தனது கணவன் மீது மேற்கொண்ட தாக்குதல் குறித்து கஹதுடுவ பொலீஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பாக கஹதுடுவ பொலீஸார் நீதிபதியின் மகனிடமிருந்தும் வீட்டுப் பணியாளரிடமிருந்தும் வாக்கு மூலங்களைப் பெற்றுக் கொண்டனர்.

அந்த வீட்டின் பிரதான குடியிருப்பாளர் என்ற வகையில் நீதிபதி மஹாநாம திலகரத்னவும் தனது வாக்கு மூலத்தை வழங்கியிருந்தார்.

கஹதுடுவ பொலீஸார் இது தொடர்பாக மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் விசாரணை அறிக்கையை கெஸ்பாவ நீதிவானுக்கு அனுப்பி வைத்தனர்.

**தமிழில்: கஜனி**

கெஸ்பாவ நீதிவான் இவ் விடயத்தைஇணக்க சபைக்கு அனுப்பி வைத்தார்.

இணக்க சபையில் இந்த விடயத்துக்குத் தீர்வு காண முடியாவிட்டால் மாத்திரம் இணக்க சபையின் சான்றிதழுடன் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என பணிப்புரை விடுத்திருந்தார்.

மேல் நீதிமன்ற நீதிபதியை சிக்கலில் மாட்ட உத்தேசித்திருந்தவர்களுக்கு இந்தப் பிரச்சினை இணக்க சபைக்கு விடப்பட்ட தகவல் கிடைத்துள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் புதிதாக விசாரணைகளை ஆரம்பித்தனர். நீதிபதியின் மகன் இராணுவக் கோப்ரலைத் தாக்கிய போதே நீதிபதி துப்பாக்கியைக் கையில் வைத்திருந்து வானத்தை நோக்கிச் சுட்டார் என்பதற்கான சாட்சியங்கள் புதிதாகக் கோரப்பட்டன. சம்பவம் இடம்பெற்றபோது அவ்விடத்தில் நின்றவர் எனக் கூறப்படும் கிரிவத்துடுவையைச் சேர்ந்த ஆர். உபுல் என்பவர் கடந்த ஓகஸ்ட் 10 ஆம் திகதியன்று பொலீஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டார்.

### உபுலின் சாட்சியம்

கைது செய்யப்பட்ட உபுல் முதலில் கஹதுடுவ பொலீஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டார். பின்னர் அங்கிருந்து கொழும்பு கோட்டையிலுள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குக்கொண்டு செல்லப்பட்டார்.

உபுல், பின்னர் பாதுகை பொலீஸாருக்கு வாக்குமூலம் அளித்த போது நீதிபதி மஹாநாம துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தார் என வாக்குமூலமளிக்குமாறு வற்புறுத்தப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு வாக்குமூலம் அளிக்க மறுத்ததால் அவரைப்பணிய வைப்பதற்கு அவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் பின்னர் ராஜித சேனாரத்னவின் வழக்கில் அரச தரப்பில் ஆஜரான மூத்த அரச சட்டத்தரணியான நவரத்ன பண்டார கொலை முயற்சிக் குற்றம் தொடர்பாக மேல்நீதிமன்ற நீதிபதி மஹாநாமவை கைது செய்ய அனுமதியைக் கோரியிருந்தார். சட்டமா அதிபரால் விடுக்கப்பட்ட அந்தக் கோரிக்கையை நிராகரிக்க முடியாத சூழ்நிலையில் மேல் நீதிமன்ற நீதிபதியைக் கைது செய்யும் பிடியாணையைக் கெஸ்பாவ நீதிவான் பிறப்பித்தார். தன் மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்தவுடன் நீதிபதி மஹாநாம திலகரத்ன அன்றைய தினமே கெஸ்பாவ நீதிவான் முன்னிலையில் ஆஜராகிப் பிணையில் தன்னை விடுவித்துக்கொண்டார்.

இம் மாதம் 17 ஆம் திகதி கெஸ்பாவ நீதிமன்றத்தில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதிபதி மஹாநாம திலகரத்ன சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகள் ஐவர் ஆஜரானார்கள்.

★

## புனரமைப்புப் பணி...

(ஏழாம் பக்கத் தொடர்)

யாழ். மருத்துவ வளாகத்தைப் பொறுத்தவரை விரிவுரையாளர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை.

பல்கலைக்கழகக் கல்வி மறுக்கப்பட்ட தனிநபர்களுக்கு திறந்த வசதிகள் ஏற்படுத்தும் முகமாக, திறந்த பல்கலைக்கழகத்தின் தற்போதைய யாழ். பிராந்திய நிலயத்திற்கு மேலதிக அடிக்கட்டுமாண தேவைகளை வழங்கியும் நாட்டின் ஏனைய பிராந்திய நிலையங்களில் கிடைக்கும் பலவிதமான கல்வி, கற்கைநெறிகளை ஆரம்பித்தும், இதன் தரம் உயர்த்தப்பட வேண்டும்.

### நீர் விநியோகம்

யாழ்ப்பாண மக்கள் தங்கள் குடிதண்ணீருக்கு நில நீர் வளத்திலேயே தங்கியுள்ளனர். சில இடங்களில் நிலநீர், உவர்ப்பு தன்மையுடையதாக காணப்படுவதால் குடி தண்ணீருக்கு உகந்ததாக இல்லை. குடாநாட்டில் பதினாறு கிராம நீர் விநியோகத் திட்டங்களும் ஒரு நகர நீர் விநியோகத் திட்டமும் உள்ளன. போர்க் காலத்தில் இத் திட்டங்கள் பலவித பாதிப்புக்குள்ளாகின. ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் இத் திட்டங்களின் புனருத்தாரண வேலைகளை மேற்கொண்டுள்ளது. கட்டட வேலைகளையும் மேற்கொண்டுள்ளது. ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தினர் இதற்காக 4 கோடியே 50 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளனர்.

உவர்த்தன்மை காரணமாக வேறு பல கிராமங்களும், நகரங்களும் குடி தண்ணீர்ப் பிரச்சினையை எதிர் நோக்குகின்றன. இந்த மக்களின் மோசமான நிலைபற்றி அதிகாரிகள் கவனம் எடுப்பதாகத் தெரியவில்லை. சில இடங்களில் கிணறுகள், பம்பிகள், துலாக்கள் பாதிப்பு அடைந்துள்ளன. இதனால் மீளக் குடியேறியவர்கள், குடிதண்ணீருக்காக வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, பாதிப்படைந்த கிணறுகளை திருத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்.

யு. என். எச். சி. ஆர் சிறு திட்டங்கள் ஊடாக ஒரு சில பொதுக்கிணறுகளை திருத்தியுள்ளது. இதற்காக 35 லட்சம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. ஐக்கியநாடுகள் சிறுவர் நிதியத்தினரும் சில கிணறுகள் கட்டியும் திருத்தியும் கொடுத்துள்ளனர்.

### மனிதவள மேம்பாடு

தற்பொழுது நடைபெறும் மீள்குடியமர்வு, புனர்வாழ்வுத் திட்டங்களுக்கு, தொழில்நுட்பத்துறைக்கு விசேடமாகக் கட்டட நிர்மாண, தொழில்துறை, மின், எலக்ரோனிக், கணனித் தொழில் நுட்பம் ஆகிய துறைகளுக்கு அதிகமான ஆளணியினர் தேவைப்படுகின்றனர். இந்தத் [illegible] றக்கூடிய ஒரு சில ஸ்தாபனங்கள் உள்ளன. அரச தொழில்நுட்பக்கல்லூரி, உயர் தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, பற்றீசியன் நிறுவனம் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுக்கு மேலதிகமாகச் சில அரசாங்கப் பாடசாலைகளில் தொழில்நுட்பக்கலை, தொழிற் கல்விப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. சில உள்ளூர் அ. சா. நிறுவனங்களும், சுயதொழில் தேசிய அரச சார்பற்ற நிறுவனங்களும் சுயதொழில், தொழில் சார்ந்த பயிற்சிகள் இலவசமாக அளிக்கின்றார்கள். பயிற்சிகளில் சாமர்த்தியம் உள்ள மாணவர்களின் தேவைகளை வழங்குவதற்கென இத்தகைய ஸ்தாபனங்கள் தங்களைச் சுயமாக அபிவிருத்தி செய்ய அனுமதிக்கப்படல் வேண்டும். முடியுமானால் பயிற்சி பெறுவோரின் நலன் கருதிப் பயிற்சிகள் இலவசமாக வழங்கப்பட வேண்டும். உபகரணங்கள், நுகர் பொருள்கள், இயந்திர சாதனங்கள் (கணனி, உதிரிப்பாகங்கள் உட்பட) அரசினால் வழங்கப்பட வேண்டும். அத்துடன் இவைகளைக் கொழும்பில் இருந்தோ அல்லது வெளிநாட்டில் இருந்தோ ஒரு குறுகிய காலத்திற்குள் பெற்றுக்கொள்ள ஏதுவாக உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படவும் வேண்டும்.

தொழில் நுட்ப ஆளணியினர், மூலப்பொருள்கள், இயந்திர சாதனங்கள் என்பன இல்லாததால் பல கைத்தொழில்கள் மீண்டும் இயங்க முடியாத நிலையில் உள்ளன. மேற்படி தேவைகளைப் பூர்த்தி செய்தால் உணவு உற்பத்தி, எண்ணெய் உற்பத்தி தளபாட உற்பத்தி ஆகிய தொழில்கள் மீள இயங்க வழி பிறக்கும்.

தற்போதைய சூழ்நிலையில் பொருளாதார சுயசார்புக்கு தொழில் நுட்பத் திறமை சார்ந்த மனிதவளம் தேவை. ஆனால் கடந்த இரண்டு வருடங்களாக இதனை நாடி ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கட்சிகளின் 9 வதைமுகாம்கள்

# கிழக்கில் இயங்குவதாகத் தகவல்

கொழும்பு, செப். 29

தமிழ்க் கட்சிகளால் நடத்தப்பட்டுவரும் 9 வதைமுகாம்கள் தொடர்பான முழு விவரங்களும் தங்களுக்குக் கிடைத்துள்ளன எனகிழக்குப் பகுதியைச் சேர்ந்த இராணுவ மற்றும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வதை முகாம்களைச் சுற்றிவளைப்பது தொடர்பான கட்டளைகள் கிடைத்தும் சுற்றிவளைபபு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கிழக்குப் பகுதியைச் சேர்ந்த மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவத்துள்ளார்.

தமிழ்க் கட்சிகளின் வதை முகாம்கள் வவுனியாவிலேயே அதிகம் உள்ளன எனவும் அவற்றில் ஒரு கட்சியால் நடத்தப்படும் 4 வதை முகாம்கள் தொடர்பான முழுத் தகவல்களும் வவுனியாவிலுள்ள இராணுவ மற்றும் பொலீஸ் அதிகாரிகளுக்குக் கிடைத்துள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா நகரில் அந்தக் கட்சியால் நடத்தப்பட்டு வரும் அந்த வதை முகாம்களில் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள், வவுனியாவைச் சேர்ந்த பிரபல வர்த்தகர்கள் உட்பட சுமார் 40 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என பாதுகாப்புத் துறையினருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுவதாக 'லங்காதீப' செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-10)

## வித்தியாரம்ப நேர விவரம்

யாழ்ப்பாணம், செப். 29

சைவ ஆலயங்களிலும் மற்றும் பாடசாலைகளிலும் சிறார்களுக்கு வித்தியாரம்பம் எனபபடும் ஏடு தொடக்கும் வைபவம் நாளை புதன்கிழமை முற்பகல் 11 00 மணியிலிருந்து 12 00 மணிவரையுமுள்ள சுப வேளையில் நடைபெறும்.

நண்பகல் 12.02 மணிக்கு மேல் ராகுகாலம். ஆதலால் அதற்கு முன்னதாகவே ஏடு தொடக்கும் நிகழ்வைச் செய்யவேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ)

## இரங்கல் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 29

அகாலமரணமடைந்த யாழ். மாநகர முதல்வர், பதில் ஆணையாளர், பொறியியலாளர், கட்டடக்கலைஞர், தட்டெழுத்தாளர் ஆகியோரின் இரங்கல் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நாவலர் மண்டபத்தில் யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பதில் ஆணையாளரின் சிறப்பு இரங்கல் உரையும், திணைக்களத் தலைவர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் ஆகியோரின் இரங்கல் உரைகளும் இடம்பெறும். (ஐ)

## தபாலதிபர் பதவி உயர்வு

யாழ்ப்பாணம், செப். 29

யாழ் பிரதம தபால் அதிபராகக் கடமையாற்றிய எஸ் திலகநாதன் பதவி உயர்வுடன் வடமாகாண நிர்வாக உத்தியோகத்தராக (தபால் திணைக்களம்) நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது இடத்துக்கு முன்பு யாழ். பிரதம தபால் அதிபராகக் கடமையாற்றிய பின்னர் அம்பாறைக்கு இடமாற்றம் பெற்ற செ. கோடீஸ்வரன் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அம்பாறைப் பிரதம தபாலதிபராக கடமையாற்றிய எஸ். திலகநாதன் யாழ். பிரதம தபாலதிபராக நியமிக்கப்பட்டதைத்தொடர்ந்தே செ. கோடீஸ்வரன் அம்பாறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். (இ-7)

## வெளியுறவு.....

(மூன்றாம் பக்கத் தொடர்)

தானுக்கும் இடையே காஷ்மீர் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் உள்ளன. இவற்றை அமைதியான முறையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை இஸ்லாமாபாத்தில் வெளியுறவுத்துறைச் செயலர்கள் அளவிலான பேச்சுவார்த்தை நடைபெறும்.

இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் கே. ரகுநாத், பாகிஸ்தான் வெளியுறவுத்துறைச் செயலர் ஷம்ஷத் அகமது இருவரும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வர். ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயங்களின் அடிப்படையில் இப் பேச்சுவார்த்தை நடைபெறும். காஷ்மீர் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து முதலில் விவாதிக்கப்படும். எல்லைப் பிரச்சினை, பொருளாதாரக் கூட்டுறவு குறித்து வரும் நவம்பரில் டில்லியில் பேச்சு நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

# நவராத்திரி விழாக்கள்

யாழ்ப்பாணம், செப். 29

இலங்கை வங்கி யாழ்ப்பாணம் இரண்டாவது கிளை ஒழுங்கு செய்துள்ள வாணி விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வங்கியின் முதலாவது மாடி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இத்நிகழ்வில் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து சுதா குழுவினரின் மங்கள இசையும், த. ந. விஜயசுந்தரத்தின் 'அபிராமி கடைக்கண்' என்ற தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் கீதவாகினி இசைக்கல்லூரி ஆசிரியையும் மாணவிகளும் இணைந்து வழங்கும் 'வாத்திய பிருந்தா' இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளன. (ஐ-8)

* * *

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இந்துமன்றம நடத்தும் விஜயதசமி விழா நாளை காலை 9 மணிமுதல் பிரதான மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறும். (ஐ)

* * *

நெடுந்தீவு தபாலகத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு வாணிவிழா நடைபெறும். தபாலதிபர், உபதபால் அதிபர், ஊழியர்கள் இணைந்து நடத்துகின்றனர். (ஐ)

* * *

யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் நடத்தும் வாணி விழா நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு சங்கப் பணிமனையில் சங்கத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தலைமையில் நடைபெறும். விழாவில் சங்கத்தின் நலன்புரிச் சங்கத் தலைவர் ந. மகேந்திரராஜா வரவேற்புரையையும், சங்க இயக்குநர்களான சபா. தியாகராஜா, க. யோகரத்தினம், பொது முகாமையாளர் மு. சிவப்பிரகாசம் ஆகியோர் சிறப்புரைகளையும் வழங்குவர்.

'வெள்ளைக்கருணையிலே' என்ற தலைப்பில் கவிஞர் சோ. பத்மநாதனின் தெய்வீகச் சொற்பொழிவும் இடம் பெறும். (ஐ-17)

* * *

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் வாணி விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மன்றத்தில் நடைபெறும்.

விசேட பூஜைகள் மற்றும் சொற்பொழிவுகள் இடம் பெறும். (ஐ-17)

* * *

பண்ணாகம் அம்பாள் கலை மன்றத்தினர் நடத்தும் வாணி விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி முதல் பண்ணாகம் தெல்லியான் காவிகோயிலில் து. துரைராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கவியரங்கம், பட்டிமன்றம், நடன அரங்கம், வினாடிவினா, நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. (ஐ-8)

* * *

மீசாலை அண்ணா அக்கடமியின் நவராத்திரி கலை விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3-00 மணிக்கு ஆசிரியர் சி. கோகுலன் தலைமையில் நடைபெறும்.

நகைச்சுவை, பேச்சு, இசை, பல்குரல், விவாதம், நடனம் ஆகிய போட்டிகளும் விழாவில் இடம்பெறும். முதன்மை விருந்தினராக லயன்ஸ்சழக மாவட்ட தலைவர் லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் கலந்து கொள்வார். (ஐ-117)

* * *

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் வாணி விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அறவழி மழலைகள் கல்விப் பூங்கா மைதானத்தில் பொ. செல்வராசா தலைமையில் நடைபெறும். (ஐ)

## சங்கானையில் தேநீர்க் கடை சீல்வைப்பு

யாழ்ப்பாணம், செப். 29

சுகாதார சீர்கேடு காரணமாக சங்கானைப் பகுதியிலுள்ள தேநீர்க் கடையொன்று நேற்று சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.

சுகாதாரப் பரிசோதகரின் முறைப்பாட்டை அடுத்து இக்கடைக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் இங்குள்ள சுகாதார சீர்கேட்டை அவதானித்ததுடன் கடையை மூடி சீல்வைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-5)


## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கவிருக்கும் ஒரு நிறுவனத்துக்குத் தகுதிவாய்ந்த ஊழியர்கள் தேவைப்படுகின்றனர், அத்துடன் யாழ். நகருக்குள் நிறுவனம் இயங்குவதற்கு வசதியுள்ள இடம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கவும். ஊழியர்கள் ஆகக் குறைந்தது ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகவும், ஆங்கிலம் பேச, எழுதத் தெரிந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். விண்ணபத்தினை உடன் அனுப்பி வைக்கவும்.

30-09-1998 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

இல 794,
மே/பா. உதயன்,
இல. 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

– நிர்வாகம்

(59503)

## மிதிவெடியில் காயமுற்றவர்களுக்கு

மிதிவெடியில் காயமுற்ற
25 வயதிற்கு உட்பட்டவர்களுடன்
தொடர்பு கொள்ள விருப்புகிறோம்

25 வயதிற்கு உட்பட்ட, மிதிவெடியினால் காயமுற்ற அனைவரையும் கீழ்க்கண்ட விலாசத்துக்கு உங்கள் முகவரியை எழுதி அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அத்துடன் காயமுற்ற திகதி, இடம், காயமுற்ற உடற்பகுதி முதலியவற்றையும் எழுதி அனுப்புயபடி கேட்டுக் கொள்கிறோம்.

ARDD
CARE AND BE FAIR

செயலாளர்
ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்
39, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(59492)


## மரண அறிவித்தல்

### கந்தையா சின்னத்துரை

(கணக்காளர், வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை பி. ஏ. தம்பி லேனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்துரை 27-09-98 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி சி. வேலாசிப்பிள்ளையின் அன்புக் கணவரும், குமாரசாமி, தங்கராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் சாரதாம்பிகை, ஈஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-09-98) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
கு. இந்திரன்
(பேரன்)

121/9, சோலைபுரம்,
வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி,
கொட்டடி.

(59509)


## வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில்

## தேர்த் திருவிழா 30-09-1998 புதன்கிழமை

சித்திரத் தேரிலே சிங்காரப் பவனி வந்து பெருமாள் பக்தர்களுக்கு அருளை அள்ளி வழங்கும் அருட்காட்சி காண வாரீர்!

★ தேர்த்திருவிழாவை முன்னிட்டு நண்பகல் 12 00 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

அனைவரும் திரண்டு வருக! கண்ணன் அருள் பெறுக!!

– பெருமாள் அடியார்கள்

விளம்பர அன்பளிப்பு:

லக்ஷன் வீடியோ சென்ரர்

இல. 320, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[59510]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்மைக் காப்பாற்றிய...

(முதலாம் பக்கத் தொடர்)
பழைய சம்பவம் குறித்து அவர் தெரிவித்ததாவது:-

1984 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் புலிகளும்ஏனைய ஆயுதக்குழுக்களும் மும்முரமாகச் செயற்பட்டுக்கொண்டிருந்த காலம்.

அப்போது இராணுவக்கப்டனாக இருந்த நான் எனது இராணுவப் பணி காரணமாக ஒரு நாள் ஹெலிக்கொப்டர் மூலம் பலாலியிலிருந்து மாதகலுக்குச் சென்றேன். அங்கிருந்து குருநகர் முகாமுக்குச்சென்ற பின்னர், குருநகரிலிருந்து பலாலிக்குத் திரும்பிக் கொண்டிருந்த சமயம் அந்தச் சம்பவம் நடந்தது. நானும் மற்றும் மூன்று படையினரும் ஹெலிக்கொப்டரில் இருந்தோம். தொழில்நுட்பக் கோளாறு காரணமாக எமது ஹெலி திடீரென நாவாந்துறையை அண்டிய குடாக்கடலில் வீழ்ந்து நொறுங்கியது. நாம் கடலில் வீசப்பட்டோம். எம்மில் ஒருவர் உயிரிழந்தார்.

நாங்கள் மூவரும் சுமார் பத்து மணி நேரம் கடலில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தோம். எமது நம்பிக்கைகள் தகர்ந்து நாம் உயிரை இழக்கும் கடைசிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்த சமயம், மீனவர் படகு ஒன்று எம்மை நெருங்கி வந்தது. அதில் மூன்று மீனவர்கள் இருந்தார்கள். கடும்மழைக்கு மத்தியில்— வெகு பிரயத்தனப்பட்டு — அவர்கள் நாமிருந்த இடத்துக்கு வந்து எம்மைக் காப்பாற்றினர். உயிர் பிரியும் சமயத்தில் — இயக்கமற்று— செயல் இழந்து — இருந்த எங்களை அவர்கள் தமது படகில் ஏற்றினர். கரைக்குக் கொண்டு வந்தார்கள்.

கரையை அண்டியிருந்த தங்களது வீட்டுக்கு எங்களைக் கொண்டு சென்றனர். எமக்கு முதலுதவி அளித்து — ஆசுவாசப் படுத்தி — சில மணிநேரம் எங்களை வைத்துக் காப்பாற்றிய பின்னர், நாவாந்துறை வீதி வழியாக குருநகர்ப் பக்கம் சென்ற பஸ்ஸில் எங்களைப் பாதுகாப்பாக ஏற்றி குருநகர் முகாமுக்கு அனுப்பி வைத்தனர்.

எமது உயிரைக் காப்பாற்றிய அந்த மூன்று மீனவரில் ஒருவர் வயோதிபர். மற்றைய இருவரும் இளைஞர்கள்.

எம்மைக் காப்பாற்றியதற்காக அந்தக் குடும்பத்தவர்களுக்கு ஏதேனும் கைம்மாறு செய்யவேண்டும் என நினைத்தேன். என்னிடம் எதுவும் இருக்கவில்லை — நான் அணிந்திருந்த சங்கிலியை (நெக்லஸ்) தவிர.

அந்தச் சங்கிலி அப்போது சுமார் ஐயாயிரம் ரூபா பெறுமதியுடையது. அதனை அந்த வீட்டில் எங்களை வைத்துப்பராமரித்த மீனவக் குடும்பத் தலைவியிடம் நான் அன்பளிப்பாகக் கையளித்தேன்.

ஆனால் அவர் அதனை ஏற்க மறுத்தார். "கடலில் தத்தளிப்போரை காப்பாற்றுவது எமது (மீனவரின்) கடமை. அதனையே நாம் செய்தோம்." என்றார் அந்தப் பெண்மணி. எனினும் அந்தச் சங்கிலியை வற்புறுத்தி அந்தப் பெண்ணின் கையில் திணித்துவிட்டு நாம் குருநகர் முகாமுக்குப் பாதுகாப்பாகப் போய்ச் சேர்ந்தோம்.

பின்னர் காங்கேசன்துறையில் உள்ள சிமெந்து ஊழியர்கள் மூலம் அந்த மீனவர்களுடன் தொடர்பு கொள்ள முயன்றேன். என்னை வந்து சந்திக்குமாறு அவர்களுக்குத் தகவல் அனுப்பினேன். அந்தத் தகவல் அவர்களுக்கு எட்டியது. ஆனால் அப்போதைய அரசியல் சூழ்நிலையால் எம்மை வந்து சந்திக்க முடியாது என்ற பதில் தகவலை அவர்கள் எமக்கு அனுப்பி வைத்தனர்.

அந்த மூவரின் முகங்களும் எனது மனதில் பசுமையாகப் பதிந்துள்ளன. அவர்களைக் கண்டவுடன் என்னால் அடையாளம் காணமுடியும். அவர்களை நான் சந்திக்க ஆவலாயுள்ளேன்.

அந்த மீனவர்களின் தன்னலம் கருதாத பேருதவியால் தான் நான் இன்று உயிரோடு இருக்கிறேன். இதனை எனது குடும்பத்தவர்களிடம்—பெற்றோரிடம் — பின்னர் என்னை மணம் முடித்த எனது மனைவியிடம் — நான் அடிக்கடி கூறுவேன்.

—இவ்வாறு கேணல் ஜெயதிலக மேலும் கூறினார்.

### சிப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்)
னந்தம் என்ற வாலிபரும் இச்சம்பவத்தில் பலியாகியுள்ளார்.

இச்சம்பவத்தில் இடையில் அகப்பட்டு இரு சிவிலியன்கள் காயமடைந்தனர். அவர்களில் எஸ். சித்திரவேல் என்பவர் பின்பு மரணமானார்.


எந்து இன்றைய புதிய வெளியீடு!
அப்பாஸ் நடித்த
★ ஆசைத்தம்பி
(CD பிரதி)
இந்தியாவில் வசூலில் சாதனை படைத்துக் கொண்டிருக்கும்
★ Jurasic Park Part III
(CD பிரதி)
நரேன் வீடியோ
140, பருத்தித்துறைவீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(சி/5015)


### மாநகரசபை...

(முதலாம் பக்கத் தொடர்)
இந்த நான்கு ஊழியர்களும் விசாரணைக்காக ஏற்கனவே கொழும்புக்குக் கூட்டிச் செல்லப்பட்டிருப்பது தெரிந்ததே. (உ)


அனேக மாணவர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
இறுதிப் பிரிவு
SPOKEN ENGLISH
WITH
GRAMMAR
Lectures By:
Mr. M. A. HARI
ஆரம்பம்: 01-10-1998 Tues — 11-00 A. m
Time Table: Tues, Thursday 11—12 A. m
BITSMANS
INSTITUTE, MANIPAY. (59481)


## மரம் நடும் பணி

மானிப்பாய், செப். 29

மானிப்பாய் பிரதேசத்தில் மிகவிரைவில் மலைவேம்பு நிழல் மரங்கள் நடும்பணி மேற்கொள்ளப்படவிருப்பதாக மானிப்பாய் லயன்ஸ் கழக வட்டத்தின் செயலாளர் எஸ். மனோகரசீலன் தெரிவித்துள்ளார். (இ-99)

### கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்)
நடத்தப்பட்டதாகத் தெரிகின்றது.

இந்தச் சமரில் 43 படையினர் உயிரிழந்ததாகவும் —

நூற்றுப் பத்துப் பேர் காயமடைந்துள்ளனர் எனவும்—

விடுதலைப் புலிகள் ஆங்காங்கே சிறு சிறு தாக்குதல்களை நடத்தி வருவதாகவும்—

பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று மாலை அறிவித்தன.

விடுதலைப் புலிகள் தரப்பில் 194 பேர் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் அறிவித்தன.

இழப்புகள் குறித்து 'புலிகளின் குரல்' வானொலி மூலம் விடுதலைப் புலிகள் வெளியிட்ட தகவல்கள், இராணுவச் செய்திகள் மீதான தணிக்கை காரணமாகத் தவிர்க்கப்பட்டுள்ளன.

இச்சமரில் பலியான புலிகளில் 57 பேரின் பெயர் விவரங்களை நேற்று மாலை 'புலிகளின் குரல்' வானொலி வெளியிட்டது.

முல்லைத்தீவுச் சமரிலும் விட இது பெரிய யுத்தம் என்று 'ரோய்ட்டர்' தெரிவித்ததாகவும் அந்த வானொலி குறிப்பிட்டது.

### பிரிகேடியர்...

(முதலாம் பக்கத் தொடர்)
திருந்தார்.

நகரசபைத் தலைவர் கலந்து கொள்ளாத நிலையில் தீர்மானங்கள் எதுவும் எடுக்கமுடியாது என்றும்—

இதன் காரணமாக மாநாடு பின்போடப்பட்டுள்ளதாகவும்—

இணைப்பதிகாரி சம்பந்தப்பட்ட ஏனையோருக்கு தெரியப்படுத்தியதாக அறிய வந்தது. (உ-21)

### கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்)
செய்திகள் தெரிவித்தன.

நேற்று இரவும் அம்புலன்ஸ் வண்டிகளின் இரைச்சலைக் கேட்க முடிந்தது.

இதேவேளை —

குடாநாட்டு வான் பரப்பில் நேற்றும் நேற்று முன்தினமும் ஹெலிக்கொப்டர்கள் ஓயாமல் பறந்து திரிந்ததைக் காணமுடிந்தது.

## வவுனியா தொலைபேசி ஓரிரு தினங்களில் சீராகும்

வவுனியா தொலை பேசி பரிவர்த்தனை நிலையத்தில் ஏற்பட்டுள்ள தொழில் நுட்பக் கோளாறு இன்னும் ஓரிரு தினங்களில் திருத்தப்பட்டு விடும் என்று 'ரெலிகொம்' அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக வவுனியாவுக்கான தொலைபேசி சேவை பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இதேவேளைநேற்று இரவு 10 மணிமுதல் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கான தொலைபேசி சேவையும் செயல் இழந்திருந்தது. இதற்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை. (ஐ-9

## காணாமற்போனவர் 21 நாளின் பின் விடுவிப்பு

யாழ்ப்பாணம், செப். 29

கடந்த 4 ஆம் திகதி மல்லாகத்தில் காணாமற்போனதாகக் கூறப்பட்ட சாவகச்சேரி வாசி ஒருவர் 21 நாள்களின் பின் வீடு திரும்பியுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இரத்தினம் சிறீஸ்கந்தராஜா (34 வயது) என்பவரே காணாமற்போய் விட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து மேற்படி குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையினால் இவர் இராணுவ முகாம் ஒன்றிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

காணாமற்போனவர் தொடர்பாகப் பலாலியில் உள்ள மனித உரிமைகள் பிரிவுடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தொடர்பு கொண்டதையடுத்தே இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

## மதுபான விளம்பரம் ஜனவரி முதல் தடை

கொழும்பு, செப். 29

மதுபானம், புகைப்பிடித்தல்ஆகியவற்றுக்கு வெகுஜன தொடர்பு ஊடகங்களில் விளம்பரம் செய்வதற்கான தடை ஜனவரி மாதத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இதற்கான பணிப்புரையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்துள்ளார்.

புகைப்பிடிப்போர், மதுபானம் அருந்துவோரில் பெரும்பாலானோர் புற்றுநோய், காசநோய் போன்ற ஆபத்தான நோய்களை எதிர்நோக்குகின்றனர். அதேசமயம் இவ்வாறான பழக்கங்களுக்கு அடிமையாவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. இவ்வாறு அதிகரிப்பதற்கு விளம்பரங்களே பெரிதும் துணைபுரிகின்றன. எனவே அவை தொடர்பாக விளம்பரம் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## 5,314 அகதிகள் இம்மாதம் கப்பலில் யாழ் வந்தனர்

'லங்கா முடித்த' கப்பல் சேவை மூலம் இம்மாதம் ஆயிரத்து 582 குடும்பங்களைச்சேர்ந்த5 ஆயிரத்து 314 அகதிகள் தமது சொந்தஇடங்களுக்குதிரும்பியுள்ளனர்.

இச்சேவையினால் 675 குடும்பங்களைச் சேர்ந்த 928 பயணிகளும் பயனடைந்துள்ளனர் என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாதம் 5 தடவைகள் திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் லங்கா முடித்த கப்பல் சேவை இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

இக்கப்பல் மூலம் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ள ஆயிரத்து 582 குடும்பங்களுக்கும் உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை திருகோணமலையில் மேலும் 7 ஆயிரம் குடும்பங்கள் வரை யாழ்ப்பாணம் செல்வதற்காக காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கப்பல் சேவை தொடர்ந்து நடைபெறாமையினால் இவர்களை உடனடியாக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5-7)

## புலிகள் தரப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்)
பாறை).

★ ஐங்கரன் (சிவமாலை மதிதேயு — மட்டக்களப்பு).

★ அர்ச்சுணபாலன் (நீலன் பீஸ்மன் — மட்டக்களப்பு).

★ மேகன் (அர்ச்சுனன் தயானந்தன் — அம்பாறை)

★ லிங்காகீதன் (குமாரியன தம்பிமுத்து — மட்டக்களப்பு)

★ புரட்சிமாறன் (பேரின்பநாயகம் ஸ்ரீரஞ்சித் — மட்டக்களப்பு)

★ குமார் சங்கர் (செபஸ்ரியான் சில்வா — மட்டக்களப்பு)

★ குமணதாசன் (மாரிக்கண்டு சதீஸ்குமார் — அம்பாறை)

★ மணிசாந்தன் கந்தசாமி (நடேசமூர்த்தி — மட்டக்களப்பு)

★ துஷ்யந்தன் (கணேசன் மகிழேந்திரன் — மட்டக்களப்பு)

★ நடேசன் (சோமசுந்தரம் அருளானந்தம் — அம்பாறை)

★ குன்றுக்குமரன் அல்லது நந்தாகன் (சீனித்தம்பி அமிர்தலிங்கம் — மட்டக்களப்பு)

★ [illegible] தம்பி சந்திரசேகர் — மட்டக்களப்பு)

★ வதனி (மாசிலாமணி புவனலோஜினி — மட்டக்களப்பு)

★ குணா (கதிர்காமர் கோதியர் மதுரை மீனாட்சி — மட்டக்களப்பு)

★ ரபீற்றா (இரத்தினம் ஜெகதினி — யாழ்ப்பாணம்)

★ சசிகலா (வேலு ஞானகேசரி — முரசுமோட்டை)

★ கேதீஸ் (கைலாசபிள்ளை உதயகுமார் — மட்டக்களப்பு)

★ குயிலிஸ்ரதன் (முத்துலிங்கம் அமிர்தலிங்கம்—மட்டக்களப்பு)

★ ரூபதரன் (திருவாசகம் விஸ்வமூர்த்தி—அம்பாறை)

★ விமலச்சந்திரன் அல்லது அஜித் (சிங்கராசா குணாள்—மட்டக்களப்பு)

★ கலையரசன் (சிங்கராசா எட்வேட் ராசா — யாழ்ப்பாணம்)

★ அருமை அல்லது விசு (நாகராசா குகேந்திரன் — யாழ்ப்பாணம்)

★ பைந்தமிழ் (கற்பகவிங்கம் புவனேஸ்வரன் — திருமலை)

★ ஆளுடைய நம்பியன் அல்லது நிலவன் (திருநாவுக்கரசு ரமேஸ்—யாழ்ப்பாணம்)

★ கார்வண்ணன் (சிதம்பரப்பிள்ளை மோகனராசா —திருமலை)

★ செங்குட்டுவன் (தம்பையா ராஜேந்திரம்—யாழ்ப்பாணம்)

★ ஜெயப்பிகுந்தா (சிவநாதன் சந்திரலக்ஸி—யாழ்ப்பாணம்)

★ அருள்சுடர் (முருகேசு சங்கீதா—மாங்குளம்)

★ களநிதி (கனகசபை சுஜீபா—மட்டக்களப்பு)

★ பிறேமலதா அல்லது முகிலா (கந்தன் சித்திரா—வவனியா)

★ பவானி (செல்லத்தம்பி கலா—மட்டக்களப்பு)

★ ஞானி (பேரின்பநாயகம் சூரியகுமாரி — மட்டக்களப்பு)

★ லவனகாந்தன் (சிறியான் கணேசமூர்த்தி — மட்டக்களப்பு)

★ கரன் (கதிர்காமத்தம்பி வசந்தன்—மட்டக்களப்பு)

★ தீச்செல்வன் (பூபாலசிங்கம் சூரியகுமார்—யாழ்ப்பாணம்)

★ மித்திலன் (செபமாலை முத்து விஜயகுமார் — மன்னார்)

★ ரவிசங்கர் (செல்வரத்தினம் மணிமாறன்—யாழ்ப்பாணம்)

★ தமிழ்ச்செல்வன் அல்லது ஷோபா(பேரின்பிரவி—மட்டக்களப்பு)

★ கண்ணி (சிவகுமார் புருசோத்தமன் — யாழ்ப்பாணம்) (ஐ-9)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29- 09- 1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org